Registered as a news paper.
பக்கங்கள்: பன்னிரண்டு
விலை ரூபா 7.00

# நமது ஈழநாடு

**தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்**




மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு : 2035 புரட்டாதி 21 ஆம் நாள் ஹிஜ்ரி 1427 ஷஃபான் 21 (07.10.2004) வியாழக்கிழமை இதழ்: 07

# முக்கிய கலந்துரையாடலுக்காக ஹெல்கிசன் இந்தியா செல்கிறார்!

## நான்கு நாட்கள் தங்கி பேச்சு நடத்தத் திட்டம்

(கொழும்பு)

இலங்கை அரசாங்கத்துக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்களை மீளவும் ஆரம்பிப்பதற்கு எடுக்கப்பட்டுவரும் முயற்சிகள் தொடர்பாக இந்திய அரசாங்கப் பிரதிநிதிகளுடன் முக்கிய கலந்துரையாடலை நடத்துவதற்காக நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் அடுத்தவாரம் புதுடெல்கிக்கு பயணத்தை மேற்கொள்ளவிருப்பதாகத் தெரியவருகிறது. (12 ஆம் பக்கம் பார்க்க)



## வெலிக்கந்த துப்பாக்கிச்சூடு இரண்டு முஸ்லிம்கள் பலி!

பொலநறுவ மாவட்டம் வெலிக்கந்த பிரதேசத்தில் ஆசிரியர் ஒருவர் உட்பட இரண்டு முஸ்லிம்கள் நேற்றுமுன்தினம் இரவு இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

கட்டுவன்வில்லைச் சேர்ந்த ஆசிரியர் கே.எம்.குத்தூஸ் (வயது 47) மற்றும் என்.எம்.சேகு மொஹமது (வயது 35) ஆகியோரே சுட்டுக் கொல்லப்பட்டவர்களாவர் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஒரே பிரசவத்தில் 5 குழந்தைகள்!

## கிளிநொச்சியில் நேற்று ஆரம்பமான மகளிர் படையணியினரின்

மது (வயது 35) ஆகியோரே சுட்டுக் கொல்லப்பட்டவர்களாவர் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

அமைச்சர் விதார் ஹெல்கிசன் அடுத்தவாரம் புதுடெல்கிக்கு பயணத்தை மேற்கொள்ளவிருப்பதாகத் தெரியவருகிறது. (12 ஆம் பக்கம் பார்க்க)



# ஒரே பிரசவத்தில் 5 குழந்தைகள்!

## பேராதனைப் பெண் சாதனை

(கொழும்பு)

பேராதனை பிலிமத்தலாவையைச் சேர்ந்த பெண் ஒருவர் நேற்று ஐந்து பிள்ளைகளை ஒரே பிரசவத்தில் பெற்றெடுத்தார்.

கொழும்பு காசல் மத்துவமனையில் சத்திரசிகிச்சை மூலம் இந்தக் குழந்தைகள் தாயின் வயிற்றிலிருந்து வெளியே எடுக்கப்பட்டன.

மூன்று பெண்குழந்தைகளும் இரு ஆண்குழந்தைகளுமே பிரசவிக்கப்பட்டன. குழந்தைகளும் தாயும் நலமுடன் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சாமிலா வீரசேகர (வயது - 29) என்னும் பெண்ணே ஐந்து குழந்தைகளையும் பெற்றெடுத்துள்ளார். இவரது கணவன் ஓர் பொலிஸ் அதிகாரி என்பது குறிப்பிடத்தக்கது.

இவர்களுக்கு திருமணமாகி 5 ஆண்டுகளாக குழந்தைகள் ஏதுமில்லாத நிலையில் அதற்கான சிகிச்சைகளை (12 ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சியில் நேற்று ஆரம்பமான

# மகளிர் படையணியினரின் போரியல் கண்காட்சி நிகழ்வு!

(கிளிநொச்சி)

தமிழீழ பெண்கள் எழுச்சிநாளை முன்னிட்டு, தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் மகளிர் படையணியின் போராட்ட வரலாற்றை எடுத்துக்காட்டும் கண்காட்சி நிகழ்வு நேற்றுக்காலை கிளிநொச்சியில் கோலாகலமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிர் மாவீரர் பணிமனை துணைப் பொறுப்பாளர் தமிழரசி தலைமையில் நேற்றுக்காலை 9.30 மணியளவில் கிளிநொச்சி மத்திய மைதானத்தில் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

நிகழ்வின் பொதுச்சுடரை பொன்தியாகம் தம்பதியினர் ஏற்றிவைத்தனர். தமிழீழ தேசியக் கொடியை மாலதி படையணியின் சிறப்புத் தளபதி கேணல் விதுஷா ஏற்றினார். 2 ஆம் லெப்ரினன்ட் மாலதியின் திருவுருவப் படத்துக்கான ஈகச்சுடரை கிளிநொச்சி முருகன் ஆலய பிரதம குரு இரத்தினேஸ்வரக் குருக்கள் ஏற்றிவைத்தார். மலர்மாலையை மாலதியின் தந்தையார் அணிவித்தார்.

நிகழ்வின் ஆயுதங்கள் உள்ள கண்காட்சி அறையை போர்ப்பயிற்சிக் கல்லூரி மகளிர் பொறுப்பாளர் அஜந்தி திறந்துவைத்தார். புகைப் படக் கண்காட்சி மண்டபத்தை மாலதி படையணியின் நிதிப்பொறுப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# முகமாலை போக்குவரத்து நேரத்தை நீடிப்பது குறித்து 4 நாட்களில் முடிவு!

## யாழ்.படைத் தளபதி சுனில் தென்னக்கோன் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

முகமாலை சோதனைச்சாவடி ஊடான போக்குவரத்து நேரத்தை நீடிப்பது தொடர்பான புதிய நடைமுறை இன்னும் நான்கு நாட்களுக்குள் அறிவிக்கப்படும். இராணுவத்தில் காணப்படும் ஆளணிப் பற்றாக்குறையாலேயே போக்குவரத்து நேரத்தை அதிகரிக்க முடியாதுள்ளதாக, யாழ். குடாநாட்டுக்கான படைத் தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன் தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் நேற்று நடைபெற்ற சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் கடமையாற் றும் இராணுவ வீரர்களில் 90 வீதமானோர் கல்வியறிவு அற்றவர்களாக இருப்பதால், அவர்களை நிர்வகிப்பதில் சிரமம் ஏற்பட்டுள்ளது. (12 ஆம் பக்கம் பார்க்க)

# பாதுகாப்பு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட இந்தியக் குழு அடுத்த வாரம் வரும்!

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உத்தேச பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்காக இந்தியப் பாதுகாப்பு உயரதிகாரிகள் குழுவொன்று அடுத்த வாரம் இலங்கைக்கு வரவுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த உடன்படிக்கை தொடர்பாக இரு நாடுகளினதும் உயர்மட்ட அதிகாரிகளிடையே பல சுற்றுப் பேச்சுக்கள் நடைபெற்றுள்ளன.

இதன்படி பாதுகாப்பு உடன்படிக்கையில் கைச்சாத்திடுவது தொடர்பான ஆரம்பக்கட்ட நடவடிக்கைகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளதாக

(12 ஆம் பக்கம் பார்க்க)

# அரிசி, பருப்பு, சீனி ஆகியவற்றின் விலைகளை குறைக்க நடவடிக்கை!

## விசேட அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவு

(கொழும்பு)

மக்களின் அன்றாட உணவுத் தேவைக்குப் பயன்படும் அரிசி, பருப்பு மற்றும் சீனி ஆகிய பொருட்களின் விலைகள் மிக விரைவில் குறைக்கப்படுமென ஜனாதிபதி தலைமையிலான விசேட அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

நாட்டில் அதிகரித்துவரும் வாழ்க்கைச் செலவைக் கட்டுப்படுத்துவது

(12 ஆம் பக்கம் பார்க்க)

எக்ஸ்போ எயார்
வான்வெளியில் உங்கள் நண்பன்...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291
email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.
EXPOAIR
Your friend in the skies...

நிறஞ்சனாஸ் சங்கானை
அப்பாஸ், நந்திதா
நடித்த
சிந்தாமல் சிதறாமல்
தினசரி காட்சிகள் : 11.00, 2.45, 6.00 (பு.நே)
MEET THE PARENTS
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)
(சி-2723)

## சிறு விளம்பரம்

### மரக்கன்றுகள் விற்பனை

சகலவிதமான பூக்கன்றுகளும் மற்றும் கனமரக் கன்றுகளும் விற்பனைககுண்டு. தொடர்பு:-நாகம்ஸ் பாம் வட்டு இந்துக் கல்லூரி அருகாமை சித்தன்கேனி.

T.P.077 - 6331518 (சி-3225)

### ஆசிரியர் தின நிகழ்வு

சங்கானை கல்விக்கோட்ட ஆசிரியர் தின விழா இன்று பி.ப 2.15 மணிக்கு வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ந.சண்முகசுந்தரம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக சங்கானை மக்கள் வங்கி முகாமையாளர் பொ.அச்சுதம்பிள்ளை கலந்துகொள்ளவள்ளார். (48)

# கோஷ்டி மோதலில் இளைஞர் படுகாயம்

## இணுவில் பகுதியில் சம்பவம்

இணுவில் பகுதியில் இரண்டு இளைஞர் குழுக்களுக்கிடையே இடம்பெற்ற கோஷ்டி மோதலில் இளைஞர் ஒருவர் கழுத்தில் பாரிய வெட்டுக் காயங்களுக்கு இலக்கான நிலையில் யாழ். போதனாவைத்தியசாலை அவசர சிகிச்சைப்பிரிவில் அனுமதிககப்பட்டுள்ளார்.

நேற்று இடம்பெற்ற இந்த மோதலில் பாரதிவீதி கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த சற்குணராஜா - சுசீலன் (வயது 22 ) என்பவரே கழுத்தில் வெட்டுக்காயங்களுக்கு இலக்காகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவராவார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

இணுவில் காரைக்கால் பகுதியில யுவதி ஒருவருடன் தகாத சேஷ்டை புரிந்தார் எனத் தெரிவித்து, காரைககால் பகுதி இளைஞர்கள் குறித்த இளைஞரை கடுமையாகத் தாக்கியுள்ளனர்.

இதனால் தாக்குதலுக்குள்ளான இளைஞன் தாவடிப்பகுதியிலுள்ள இளைஞா் குழுஒன்றை அழைத்து வந்து தன்மீது தாக்குதல் நடத்திய இளைஞர் குழுமீது தாக்குதலை மேற்கொண்டார். இதன்போது இந்த இளைஞர் குழுவினர் கத்தி மற்றும் பொல்லுகளும் பாவித்தாக தெரிய வருகிறது. இரண்டு இளைஞர்குழுவினருக்குமிடையேயான தாக்குதலின் உச்சக் கட்டத்திலேயே இந்த இளைஞர் கழுத்தில் கத்தி வெட்டுக்கு இலக காளார். (82)

# வடக்கு - கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சு நடத்தும்



## தமிழ் இலக்கியப் பெருவிழா 2004

காலம் :- ஒக்ரோபர் 9, 10, 11 ஆம் திகதிகள்.
இடம் :- யாழ்.இந்து மகளிர் கல்லூரி

- தினமும் காலை 9 மணி தொடக்கம் 1 மணிவரை ஆய்வரங்கு
- தினமும் மாலை 5 மணிதொடக்கம் கலை நிகழ்வுகள்

## இலக்கிய விழாவின் முக்கிய நிகழ்வுகள்

- பண்பாட்டு ஊர்வலம்
- சுழலும் சொற்போர்
- நூல் வெளியீடு
- இலக்கிய விருது வழங்கல் - 2003
- நாடக, நாட்டிய, கூத்து நிகழ்வுகள்
- ஆய்வரங்கு
- கவியரங்கம்
- ஆவண ஒளிப்பேழை வெளியீடு (பேராசிரியர் சிவத்தம்பி அவர்களைப்பற்றி)
- ஆளுநர் விருது வழங்கல்

(பண்பாட்டு ஊர்வலம் நல்லூர் கந்தசுவாமி கோவிலிலிருந்து ஆரம்பமாகி அரசடி வீதி வழியாக கந்தர்மடம் சந்தியை அடைந்து பின்னர் யாழ்.இந்து மகளிர் கல்லூரியைச் சென்றடையும்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை,
இளைஞர் விவகார அமைச்சு
வடக்கு-கிழக்கு மாகாணம்
திருகோணமலை.

(3226)

ராஜா யாழ்ப்பாணம்.
இந்தியாவிலும் இலங்கையிலும்
ஒரே தின வெளியீடு
அர்ஜுன்,
ஸாரா தத்தா,
விவேக்,
ரகுவரன்
நடித்த

அரசாட்சி
காட்சிநேரம்
10.30, 2.30, 6.30, (பு.நே)
(சி-2725)

நாகம்ஸ் சுன்னாகம்
சத்தியராஜ், சிபிராஜ் நடித்த
ஜோர்
தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நே)
09.10.04 அன்று
இலங்கை - இந்தியா
ஒரேதின வெளியீடான
ஸ்ரீகாந்த சினேகா நடித்த
போஸ் (ரீலீஸ்)


## புறொயிலர் விற்பனை

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு அதிரடி விலையில் புறொயிலர் கோழிகளை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். சுத்தம் செய்து தரப்படும்.

தொடர்பு:- நாகம்ஸ் பாம்,
வட்டு இந்துக் கல்லூரி அருகாமை,
சித்தன்கேணி,
T.P. 077 - 633 1518

(சி-3224)

# பாராட்டி வாழ்த்துகிறோம்



வலி தென்மேற்கு மானிப்பாய் பிரதேசசபையில் உள்ளூராட்சி உதவியாளராகப் பணிபுரியும் நவாலியூர்

## செல்வராசா ரமேஷ்

தமிழ்நாடு மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் பொருளியல் M.A.(Econ) Hons சிறப்புப்பட்டம் பெற்றதையிட்டு மிக்க மனமுவந்து பாராட்டி வாழ்த்துகிறோம்.

யாழ்.பல்கலைக்கழகத்தில் பொருளியலில் கலைமானி சிறப்பு B.A.(Econ) Hons பட்டத்தையும், இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் P.G.Diploma in Education (ousl) Diploma in Management (ousl) ஆகிய பட்டங்களையும், யாழ்.பல்கலைக்கழகத்தில் பொதுநிர்வாகத்தில் P.G.Diploma in Public Adm) பட்டப்பின் டிப்ளோமா பட்டத்தையும் பெற்றுள்ள இவர் ஒரு சமாதான நீதிவானும் ஆவார்.

பிரதேச வளர்ச்சியில் முன்னின்று செயற்பட்டுவரும் செயல்வீரரான செல்வராசா ரமேஸ் பத்திரிகைத்துறையில் ஆர்வமாக தமது கருத்துக்களைத் தெரிவித்துவருபவருமாவார். வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் பழைய மாணவனான இவர், அங்கு பொருளியல், புள்ளிவிபரவியல் விரிவுரையாளராகப் பணிபுரிந்ததுடன், அந்தக் கல்லூரியினதும், யாழ்.பல்கலைக்கழகத்தினதும் ஹொககி அணிக்குத் தலைமை தாங்கி 3 தடவைகள் ஹொக்கி அணி சார்பில் corours விருதுபெற்றதுடன் 5 ஆவது பல்கலைக்கழகங்களுக்கிடையிலான மினி ஒலிம்பிக் போட்டியில் தேசியரீதியில் ஹொக்கி அணி சார்பாக தலைமையேற்றுப் பங்குபற்றியிருந்தார்.

யாழ்.பல்கலைக்கழகத்தின் முன்னாள் உடற்கல்வித்துறை, விளையாட்டு உளவியல் விரிவுரையாளராகக் கடமையாற்றிய செ.ரமேஷ் யாழ்.பிராந்திய இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ விரிவுரையாளராகப் பணியாற்றிவருகின்றார். இவற்றுடன் நவாலி HSCMF நிறுவனத்தின் தலைவராகவும் இருந்துவருமிவர் மேலும் பலபல பட்டங்களைப்பெற்று சேவையாற்ற வேண்டுமென மனதார வாழ்த்துகிறோம்.

யாழ்.மாவட்டம். (சி-3227) பத்திரிகைத்துறை நண்பர்கள்.

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



5 ஆம் ஆண்டு புலமைப் பரீட்சையில் 144 புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்த யா/ கொற்றாவத்தை அ.மி.த.க. பாடசாலை மாணவி

## செல்வி றொஷானி தவேஸ்வரன்

அவர்களையும் அவரை வழி நடத்திய அதிபர், ஆசிரியர்கள் அனைவரையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வினோ ஸ்ரோர்ஸ் பொலிகண்டி. ரதன் மரக்காலை வல்வெட்டி.
மது அழகுமாடம் பொலிகண்டி. நீதன் மரக்காலை உரும்பிராய்.
சுமதாலைற் பொலிகண்டி. சி.சிவப்பிரகாசம் குடும்பத்தினர்.

(சி-3222)

# அறிவித்தல்

## கிராமிய அபிவிருத்தி வங்கியின் நேர்முகத் தேர்வுக்கான இடம், திகதி மாற்றம் தொடர்பான அறிவித்தல்

கிராமிய அபிவிருத்திவங்கியினால் நேர்முகத் தேர்வுக்காக இம்மாதம் 6 ஆம், 7 ஆம், 8 ஆம் திகதிகளில் அழைக்கப்பட்டவர்களுக்கான நேர்முகத் தேர்வு நேரம், இடம் என்பன மாற்றப்பட்டுள்ளது.

எனவே, மேற்குறிப்பிட்டவர்கள் அனைவரையும் 08.10.2004 வெள்ளிக்கிழமை அன்று நேர்முகத் தேர்வுக்காக பிரதானசாலை கிளிநொச்சியிலுள்ள கிராமிய அபிவிருத்தி வங்கியின் கிளிநொச்சிக் கிளைக்கு காலை 9.00 மணிகரும் நண்பகல் 12.00 மணிகரும் இடையில் உரிய ஆவணங்களுடன் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்கின்றனர்.

பொது மேலாளர்,
கிராமிய அபிவிருத்தி வங்கி,
மத்திய செயலகம், கிளிநொச்சி.

(சி-2869)

JAFFNA BRANCH

# சட்டவிரோத ஆயுதங்களை ஒப்படைக்க மீளவும் பொது மன்னிப்பு வழங்கப்படும்

## பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு

சட்டவிரோதமான முறையில் ஆயுதங்கள் வைத்திருப்போர் அவற்றை ஒப்படைக்குமாறும், அதற்கு அவர்களுக்குப் பொது மன்னிப்பு வழங்கப்படுமெனவும் அரசாங்கம் கடந்த ஐந்து வருடங்களாக ஊடகங்கள் மூலம் அறிவித்தும் - ஒரு சிறுதொகை சட்டவிரோத ஆயுதங்களே மீளப் பெறப்பட்டுள்ளன.

இருந்தபோதும் பொதுமக்களிடம் முப்பதாயிரம் சட்டவிரோத ஆயுதங்கள் பாவனையில் உள்ளதாக - பொதுமக்கள் பாதுகாப்பு சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சர் ரட்ண சிறிவிக்கிரமநாயக்க தெரிவித்தார்.

சட்டவிரோத ஆயுதங்களைப் பயன்படுத்தும் பாதாள உலக குழுவினருக்கு, நாட்டின் வடக்கு- கிழக்குப் பகுதிகளிலிருந்து இவை விற்கப்படுவதாக புலனாய்வுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

1988 ஆம் ஆண்டு அரசியற் கட்சிகளுக்கு பாதுகாப்பு அமைச்சால் வழங்கப்பட்ட பெருமளவு ஆயுதங்கள் மீளப் பெறப்படவில்லை. இவையும் தற்போது சட்டவிரோத ஆயுதங்களாக உள்ளது.

இதனிடையே சட்ட விரோத ஆயுதங்களை வைத்திருப்போர்- அதனை இந்த மாதம் முதலாம் திகதியிலிருந்து அடுத்த மாதம் முப்பதாம் திகதி வரை ஒப்படைக்கலாம் அல்லது அந்த ஆயுதங்கள் வைத்திருப்பதற்கான அனுமதியைப் பெற்றுக் கொள்ளலாம்.

இந்தச் சட்டவிரோத ஆயுதங்களை மாவட்ட செயலகங்கள் அல்லது பிரதேச செயலகங்கள் அல்லது அருகிலுள்ள பொலிஸ் நிலையங்களில் ஒப்படைக்க முடியும்.

இந்தக் காலப்பகுதியில் சட்டவிரோத ஆயுதங்கள் வைத்திருந்தவர்களுக்கு எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படமாட்டாது.

தற்போது இடம்பெற்று வரும் பாரிய குற்றச் செயல்களுக்கு படைகளிலிருந்து தப்பியோடிய அனுபவம் வாய்ந்தவர்களே காரணம்.

இந்த வருட தொடக்கத்திலிருந்து கடந்த மாதம் 24 ஆம் திகதி வரை - படைகளிலிருந்து தப்பியோடிய 987 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். ஆனால், கடந்த வருடம் 2619 பேர் கைது செய்யப்பட்டனர். இவர்களில் 142 கடற்படையினரும், 68 விமானப்படையினரும் உள்ளடங்குவர்.

இந்த வருடம் ஜுன் மாதம் வரை சட்ட விரோதமான முறையிலுள்ள ரி 56 துப்பாக்கிகள் 15, றிவோல்வர் 28, பிஸ்ரல் 18, (இதற்குள் 9 மில்லி மீற்றர் பிஸ்ரல்களும் அடங்கும்), றிப்பிற்றர் ஷொட்கண் 3, ஷொட்கண் 15, உள்ளூர் தயாரிப்பு துப்பாக்கிகள் 95, என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

ஆனால் கடந்த வருடம் 34 பொலிஸ் பிரிவுகளில் - ரி 56 துப்பாக்கிகள் 46, றிப்பிட்டர் 39, பிஸ்ரல் 78, கைத்துப்பாக்கிகள் 174 என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

நாடாளுமன்ற உறுப்பினர்களாக இல்லாத சிலர் - தொடர்ந்தும் இந்த சட்டவிரோத ஆயுதங்களை வைத்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. ஆனாலும், சிலர் இந்த ஆயுதங்களை மீள ஒப்படைத்துள்ளனர்.

1988 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பத்தாயிரம் ஆயுதங்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள் மற்றும் உள்ளூர் அரசியல்வாதிகள் போன்றவர்களுக்குப் பாதுகாப்பு அமைச்சினர் வழங்கப்பட்டது.

சட்ட விரோத ஆயுதங்களை ஒப்படைக்குமாறு அரசாங்கம் 2002 ஆம் ஆண்டிலிருந்து கோரிவருகின்றபோதும் அதற்கு உரிய பதில் கிடைக்கவில்லையென மேலும் தெரிவித்தார்.

## தன்னைத்தானே சுட்டு தற்கொலை

(வவுனியா)

வவுனியா -மன்னார் வீதியில் சாளம்பைக்குளத்தில் இளைஞர் ஒருவர் தன்னைத்தானே சுட்டுத் தற்கொலை செய்துகொண்டதாகத் தெரியவருகிறது.

உயிரிழந்தவர் லஜகாந்தன் (வயது 21) என அடையாளம் காணப்பட்டுள்ளார். இவரின் தற்கொலைக்கான பினனணி என்ன என்பது குறித்து, பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## அங்கரின் விலை 8 ரூபாவால் அதிகரிப்பு

அங்கர் பால்மாவின் விலை மேலும் அதிகரிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

முன்னர் 142 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட அங்கர் பால்மாவின் விலை மேலும் 8 ரூபாவால் அதிகரிக் கப்பட்டுள்ளது. இதன்படி 400 கிராம் அங்கர் பால்மா பக்கற் ஒன்றின் விலை 150 ரூபாவாக அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நுகர்வோர் பாதுகாப்பு அமைச்சின் அனுமதியுடனேயே இந்த விலை அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டது.

இதேவேளை, கோதுமை மாவின் விலையும் விரைவில் அதிகரிக்கப்படவுள்ளதாகவும் இதற்கான அனுமதியை பிறிமா நிறுவனம் நிதி அமைச்சிடம் கோரியுள்ளதாகவும் தெரியவருகிறது.

# இலங்கை கடற்படையால் தமிழக மீனவர்கள் கடத்தல்

## விடுவிக்குமாறு ஜெயலலிதா கடிதம்!

தமிழக மீனவர்கள் கடத்தப்பட்ட சம்பவத்தை அடுத்து, இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்கிற்கு தமிழக முதல்வர் ஜெயலலிதா - அவசர கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

இராமேஸ்வரத்தைச் சேர்ந்த மீனவர்கள் 20 பேருடன், அவர்கள் பயணம் செய்த 5 படகுகளையும் சர்வதேச எல்லையைத் தாண்டியதாக குற்றஞ்சுமத்தி, இலங்கை கடற்படையினர் கடத்திச் சென்றுள்ள பாதகச் செயலை, தங்கள் கவனத்துக்கு கொண்டுவர விரும்புகிறேன்.

மாநில புலனாய்வுத்துறையினர் அளித்துள்ள தகவலின் படி, இலங்கைக் கடலுக்குள் வர வேண்டாமென்றும், அவர்களின் படகுகளை விடுதலைப் புலிகள் கொளுத்தி விட திட்டமிட்டுளளார்கள் என்றும் சில மீனவர்களிடம் எச்சரிக்கைக் கடிதம் ஒன்றையும் இலங்கை கடற்படையினர் கொடுத்துளளதாகவும் தெரிகிறது.

தங்களின் பிழைப்பை நடத்துவதற்கு கடலுக்கு மீன் பிடிக்கச் செல்லும் மீனவர்களை - இலங்கை கடற்படையினர் அடிக்கடி கடத்திச் செல்லும் வழக்கம், தமிழக கரையோரப் பகுதிகளைச் சேர்ந்த மக்களிடையே பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

கடத்திச் சென்றது மட்டுமில்லாமல், விடுதலைப்புலிகளால் ஆபத்து ஏற்படும் என்று இலங்கை கடற்படையினர் மீனவர்கள் சிலரிடம் கடிதம் ஒன்றை கொடுத்திருக்கும் செய்தி மிகுந்த அதிர்ச்சி அளிக்கிறது.

கச்சதீவைச் சுற்றியுள்ள பாக் ஜலசந்தியில் இந்திய மீனவர்களுக்கு எதிராக அடிக்கடி நடத்தப்படும் தாக்குதல்கள் குறித்து நான் பலமுறை இந்திய அரசுக்கு எடுத்துக் கூறியுள்ளேன்.

இந்திய மீனவர்கள் தங்கள் பிழைப்பை நிம்மதியாகத் தொடர, அவர்களுக்குத் தேவையான பாதுகாப்பை அளிக்க ஒரு நீண்டகாலத் திட்டத்தை வகுக்க வேண்டுமென்று இந்திய அரசை நான் தொடர்ந்து வலியுறுத்தி வந்துள்ளேன்.

இந்திய மீனவர்கள் தங்கள் பாரம்பரிய தொழிலை நடத்துவதற்கு தடை ஏற்படுத்தி, பயங்கரவாத குழுககளின் ஆடுகளமாக இந்து மகா சமுத்திரம் மாறிவிடக்கூடாது.

இந்திய மீனவர்களை சர்வவேச எல்லையில் இருந்து கடத்திச் சென்று, அதன் மூலம் சர்வதேச கடல் எல்லையை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் இருப்பது போன்ற ஒரு சூழ்நிலையை விடுதலைப்புலிகள் போன்ற அமைப்பினரின் சட்டத்துக்கு புறம்பான தங்கள் நடவடிக்கைகள் மூலம் ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ளது மிகவும் கண்டனத்துக்குரியது.

இது போன்ற நிகழ்ச்சிகளால், சர்வதேச பாதுகாப்பு விடயத்தில் இந்தியாவுக்கு பெரும் பாதக விளைவுகள் ஏற்படும்.

இலங்கையில் உள்ள இந்திய தூதரகம் - இந்த விடயத்தில் உடனடியாகத் தலையிட்டு, இலங்கை கடற் படையால் தமிழக மீனவர்கள் கடத்திச்செல்லப்பட்டுள்ள சம்பவம் குறித்து - இலங்கை அரசிடம் ஆட்சேபனை எழுப்புவதுடன், இந்திய தூதரக அதிகாரிகள் இலங்கை அரசுடன் தொடர்பு கொண்டு, சிறைபிடிக்கப்பட்டுள்ள 20 மீனவர்களையும், அவர்களின் படகுகளையும் உடனடியாக விடுவிக்குமாறு, இலங்கை அரசிடம் வற்புறுத்த ஆணையிடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், இது போன்ற சம்பவங்கள் இனியும் நடப்பதை இந்திய அரசு பொறுத்துக் கொள்ளாது என்பதுடன், விடுதலைப் புலிகளுக்கும் கடுமையான எச்சரிக்கையை இந்திய அரசு திட்டவட்டமாக தெரிவிக்க வேண்டும் என அந்தக் கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

## இரண்டாவது தொகுதி பட்டதாரிகளுக்கு

# 15 ம் திகதி பயிற்சிகளை ஆரம்பிப்பது தாமதமாகும்

இரண்டாவது தொகுதி பட்டதாரிகளுக்கான பயிற்சி - எதிர்வரும் 15 ஆம் திகதி ஆரம்பிப்பது சாத்தியமற்றதென நிதியமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பட்டதாரிகளை அரச சேவையில் உள்ளீர்த்துக் கொள்வதற்கான பயிற்சியில் முதலாவது தொகுதிப் பட்டதாரிகளுக்கான பயிற்சி தற்போது நடைபெற்று வருகின்றது.

இரண்டாவது தொகுதியாகத் தெரிவு செய்யபபட்ட பட்டதாரிகளுக்கான பயிற்சிகளை வழங்குவதற்கான இடவசதி மற்றும் விரிவுரையாளர் பற்றாக்குறை என்பன காணப்படுவதால், இந்தப் பயிற்சி இந்த மாதம் 15 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவிருந்த போதிலும் அது சற்றுக் காலம் தாழ்த்தியே ஆரம்பிக்கப்படவுள்ளது.

விரைவாக இந்தப் பயிற்சி நெறியை ஆரம்பிப்பது தொடர்பாக திறைசேரியின் உயர் அதிகாரிகளுடன் நிதியமைச்சு பேச்சில் ஈடுபட்டுள்ளதாகவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (ப)

# அம்பாறை படுகொலை சூத்திரதாரி கைதானார்!

(கொழும்பு)

அம்பாறை மாவட்டம் கல்முனைக்குடி மற்றும் சாய்ந்தமருது ஆகிய முஸ்லிம் பிரதேசங்களில் இடம்பெற்ற ஆட்கொலைச் சம்பவங்கள் தொடர்பாக, தேடப்பட்டு வந்த சூத்திரதாரியை - கல்முனைப் பொலிஸார் கைது செய்தனர்.

சம்மாந்துறையைச் சேர்ந்த சுலைமான லெப்பை சலீம் என்பவரே இந்த சூத்திரதாரியாவார்.

கல்முனைக்குடி மற்றும் சாய்ந்தமருது பிரதேசங்களில் அண்மைக் காலங்களில் ஒரு யுவதி உட்பட, 4 முஸ்லிம்கள் இனந்தெரியாத ஆயுதபாணிகளினால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இந்த ஆட்கொலைச் சம்பவங்கள் தொடர்பாக பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து, கடந்த மாதம் 14 ஆம் திகதி சம்மாந்துறையிலுள்ள அந்த நபருடைய வீடு பொலிஸாரால் முற்றுகையிடப்பட்ட போதிலும், அவர் தப்பிச் சென்றுவிட்டார்.

இவரது வீட்டிலிருந்து ரி.56 ரக துப்பாக்கி ஒன்றும், உள்ளூர்த் தயாரிப்பான கைத்துப்பாக்கி ஒன்றும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டு, இவருடைய மனைவி அப்துல் நஜமா என்பவரும் கைதுசெய்யப்பட்டு, மட்டக்களப்பு சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளன.

தலைமறைவாகியிருந்த இவரை கல்முனைப் பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்து, கல்முனை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தியபோது, மேலதிக நீதிபதி எம்.மொகிதீன் இந்த நபரை எதிர்வரும் 12 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.





சர்வதேச ஆசிரியர்தினமான நேற்று யாழ். குடாநாட்டிலுள்ள பல்வேறு பாடசாலைகளிலும் ஆசிரியர்களைக் கௌரவிக்கும் சிறப்பு நிகழ்வுகள் நடைபெற்றன. யாழ். நகரிலுள்ள சில பாடசாலைகளின் ஆசிரியர்தின நிகழ்வுகளின் காட்சிகள்

படம் : தீபன்

# 8 விக்கெட்டுக்களால் இலங்கையை பாகிஸ்தான் அணி தோற்கடித்தது!



பாகிஸ்தானில் நடைபெறும் முத்தரப்பு ஒருநாள் போட்டித் தொடரில் நேற்று இலங்கை அணிக்கு எதிராக நடைபெற்ற பரபரப்பான ஆட்டத்தில் பாகிஸ்தான் எட்டு விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

கராச்சியில் நேற்று நடைபெற்ற போட்டியில் இலங்கை அணி நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

ஆரம்பத்திலேயே பாகிஸ்தான் அணி பந்துவீச்சாளர்களின் பந்துவீச்சில் இலங்கை அணி வீரர்கள் பெரிதும் திணறினர்.

இலங்கை அணி 4 ஓட்டங்களை மட்டுமே பெற்றிருந்த நிலையில் குணவர்த்தன ஒரு ஓட்டத்துடன் ஆட்டமிழந்து சென்றார்.

அடுத்துவந்த அத்தப்பத்து - ஜெயசூரியவுடன் இணைந்து ஆட்டத்தைத் தொடங்கினார். இந்த ஜோடி ஓட்டங்களை நிதானமாக குவித்துக் கொண்டிருந்தபோது ஜெயசூரிய 53 ஓட்டங்களில் ஆட்டமிழந்து சென்றார். இவர் 5 பவுண்டரி, ஒரு சிக்ஸருடன் இந்த ஓட்டங்களைப் பெற்றார்.

இதன் பின்னர் இலங்கை அணி தொடர்ச்சியாக விக்கெட்டுக்களை இழந்துகொண்டிருந்தது. மூன்றாவது விக்கெட்டாக சங்ககாரவுடன் இணைந்து ஆடிக்கொண்டிருந்தபோது, அத்தப்பத்து 46 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து சென்றார்.

இதையடுத்து சங்ககார 38 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து செல்ல ஜெயவர்த்தன களமிறங்கினார். ஆனாலும் 18 ஓட்டங்களை மட்டுமே பெற்ற நிலையில் சொகைப் மலிக்கின் பந்து வீச்சில் அவர் ஆட்டமிழந்தார்.

இதன்பின்னர் களமிறங்கிய டில்ஷான் 4 ஓட்டங்களை மட்டுமே பெற்ற நிலையில், சொகைப் மலிக்கின் பந்துவீச்சுக்கு ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த உபுல் சந்தன 9 ஓட்டங்களுடனும், வாஸ் 11 ஓட் டங்களுடனும், ம.்.ரூப் 15 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்து சென்றனர்.

ஆட்டநேர முடிவில் லொக்கு



ஆராய்ச்சி 4 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார்.

50 ஓவர்கள் முடிவில் இலங்கை அணி 9 விக்கெட்டுக்களை இழந்து 232 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

பந்துவீச்சில் சொகைப் மலிக் 3, மொகமட் சமி 2, நவீட் உல் ஹசன், அக்தர், அப்ரிடி ஆகியோர் தலா 1 விக்கெட்டையும் கைப்பற்றினர்.



பாகிஸ்தான் அணி பந்துவீச்சாளர்கள் 33 உதிரி ஓட்டங்களை விட்டுக் கொடுத்தனர்.

சுலபமான வெற்றி இலக்குடன் களமிறங்கிய பாகிஸ்தான் அணிக்கு ஆரம்பத்தில் இலங்கை அணியின் பந்து



வீச்சு சவாலாகவே இருந்தது.

அணி 33 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான சல்மான் பட், யாசிர் ஹமீட் ஆகியோர் ஆட்டமிழந்து சென்றனர். இவர்களின் விக்கெட்டுக்களை சொய்சாவும், வாஸும் வீழ்த்தினர்.

இதையடுத்து ஆடுகளத்தில் நுழைந்த சொகைப் மலிக்கும், யூசுப் யுகானாவும் இணைந்து பாகிஸ்தான் அணியை வெற்றி இலக்குக்கு இட்டுச்சென்றனர்.

மலிக் 103 பந்துகளில் 3 பவுண்டரி, ஒரு சிக்ஸருடன் 86 ஓட்டங்களுடனும், யூசுப் யுகான 121 பந்துகளில் 7 பவுண்டரி, ஒரு சிக்ஸருடன் 107 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர். யுகானாவின் 10 ஆவது சதம் இதுவாகும்.

2 விக்கெட்டுக்களை மட்டுமே இழந்து பாகிஸ்தான் அணி வெற்றி இலக்கை எட்டியதன் மூலம் 8 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

## உதைபந்தாட்ட போட்டியின் இறுதியாட்டங்கள் இன்று

யாழ்.வலயத்துக்குட்பட்ட நல்லூர் கோட்டப் பாடசாலைகளிடையே நடைபெற்றுவந்த உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டங்கள் இன்று பகல் 2.00 மணி முதல் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இந்த இறுதியாட்டங்களில் 16 வயதுப் பிரிவில் முத்துத்தம்பி வித்தியாலயத்தை ஏதிர்த்து யாழ். இந்துக்கல்லூரி மோதும் போட்டியும் -

18 வயதுப்பிரிவில் யாழ். இந்துக் கல்லூரியை எதிர்த்து கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயமும், மூன்றாவது இடத்துக்கான போட்டிகளில் 16 வயதுப் பிரிவில் செங்குந்தா இந்துக் கல்லூரியை எதிர்த்து கொக்குவில் இந்துக்கல்லூரியும், 18 வயதுப் பிரிவில் செங்குந்தா இந்துக்கல்லூரியை எதிர்த்து முத்துத்தம்பி வித்தியாலய அணியும் மோதவுள்ளன. (58)

## உதைபந்தாட்டம்

யாழ். வலயத்துக்குட்பட்ட யாழ் கோட்ட பாடசாலைகள் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இரு போட்டிகள் இன்று நடைபெறவுள்ளன.

இந்தப் போட்டிகள் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் பி.ப. 1.00 மணி முதல் நடைபெறும்.

14 வயதுப் பிரிவில் புனித ஜேம்ஸ் மகா வித்தியாலயத்தை எதிர்த்து புனித ஜோசப் வித்தியாலயமும், 16 வயது பிரிவில் நாவாந்துறை றோ.க. வித்தியாலத்தை எதிர்த்து புனித ஜோசப் வித்தியாலயமும் மோதவுள்ளன. (58)




# இந்தியாவுக்கெதிரான முதல் டெஸ்ட்; 316 ஓட்டங்கள் குவித்தது அவுஸ்ரேலியா



இந்தியாவுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியின் முதலாவது நாள் ஆட்டத்தில் அவுஸ்ரேலிய அணி 5 விக்கெட் இழப்புக்கு 316 ஓட்டங்களைப் பெற்றது.

இந்திய - அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையிலான நான்கு டெஸ்ட்களைக் கொண்ட போட்டித் தொடரில் முதல் போட்டி நேற்று பெங்களூர் சின்னச்சாமி ஸ்ரேடியத்தில் ஆரம்பமானது.

நேற்றைய போட்டியில் இந்திய அணியில் டெண்டுல்கர் இடம்பெறவில்லை. அவருக்குப் பதிலாக யுவராஜ்சிங் இறங்கினார். தொடக்க வீரராக ஆகாஷ் சோப்ராவுக்கு வாய்ப்பளிக்கப்பட்டிருக்கிறது.

அவுஸ்ரேலிய அணியிலிருந்து பிரட் லீ விலக்கப்பட்டு மைக்கல்



கிளார்க் சேர்க்கப்பட்டார். அவுஸ்ரேலியாவின் 389 ஆவது வீரராக இவர் நேற்று அறிமுகமானார்.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற அவுஸ்ரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. தொடக்க வீரர்களாக லாங்கரும், ஹைடனும் களமிறங்கினர். இந்த ஜோடி நிலைத்து நின்று நிதானமாக ஆடிக்கொண்டிருந்தது.

அணி 50 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஹர்பஜன்சிங்கின் பந்துவீச்சுக்கு யுவராஜ்சிங்கிடம் பிடிகொடுத்து ஹைடன் ஆட்டமிழந்தார். இவர் 26 ஓட்டங்களை மட்டுமே பெற்றிருந்தார்.

இரண்டாவது விக்கெட்டுக்கு லாங்கருடன் கடிச் இணைந்துகொண்டார். மதிய இடைவேளையின் போது, அவுஸ்ரேலிய அணி ஒரு விக்கெட்





இழப்புக்கு 70 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இதன்பின்னர் அவுஸ்ரேலிய அணி சற்றுத் திணறத் தொடங்கியது. அணி 124 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் லாங்கர் இர்பான் பதானின் பந்துவீச்சில் போல்டானார்.

இவர் 126 பந்துகளில் 5 பவுண்டரிகளுடன் 52 ஓட்டங்களைப் பெற்றிருந்தார். அடுத்து மாட்டின் களமிறக்கப்பட்டார். ஆனால் 12 பந்துகளை மட்டுமே எதிர்கொண்டு 3 ஓட்டங்களைப் பெற்ற இவர் கும்ளேயின் பந்துவீச்சில் சோப்ராவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்து சென்றார்.

இதையடுத்து 5 ஆவது விக்கெட்டுக்கு கடிச்சுடன், டரன் லீமன் ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடி சற்று நேரமே நின்றுபிடித்தது. 17 ஓட்டங்களை மட்டுமே பெற்றிருந்த நிலையில் இவர் கும்ளேயின் பந்துவீச்சில் ராவிட்டிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்ததாக கிளார்க் தனது கன்னி டெஸ்ட் போட்டியில் ஆடவந்தார். இவர் கடிச்சுடன் இணைந்து அபாரமாக ஆடி இந்திய அணி பந்துவீச்சாளர்களைத் திணறடித்தார்.

எனினும், அவுஸ்ரேலிய அணி 256 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் கடிச்சின் விக்கெட்டை வீழ்த்தினார் கும்ளே. 81 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் இவர் போல்டானார்.

அடுத்து கில்கிறிஸ்ட் களமிறங்கி அபாரமாக அடித்து ஆடினார். 90 ஓவர்கள் நிறைவில் முதல்நாள் ஆட்டம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டபோது அவுஸ்ரேலிய அணி 5 விக்கெட் இழப்புக்கு 316 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

கிளார்க் 76 ஓட்டங்களுடனும், கில்கிறிஸ்ட் 35 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.



பந்துவீச்சில் கும்ளே 3, இர்பான் பதான், ஹர்பஜன்சிங் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

# கிரிக்கெட் தரவரிசையில் இந்தியா 7 ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டது

(லண்டன்)

ஐ.சி.சி சம்பியன் கிரிக்கெட் போட்டி இங்கிலாந்தில் நடைபெற்ற பின்னர் நாடுகளின் தரவரிசைப்பட்டியலை சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி) வெளியிட்டுள்ளது.

அதன்படி 5 ஆவது இடத்திலிருந்த இந்தியா 102 புள்ளிகள் பெற்று 7 ஆவது இடத்துக்கு பின் தள்ளப்பட்டது. ஐ.சி.சி கிண்ண போட்டியில் மோசமாக ஆடியதால் இந்த நிலைமை ஏற்பட்டது.

அவுஸ்ரேலியா 137 புள்ளிகள் பெற்று தொடர்ந்து முதல் இடத்தில் உள்ளது. இலங்கை 121 புள்ளிகள் பெற்று 2ஆவது இடத்திலும், நியூஸிலாந்து 116 புள்ளிகள் பெற்று 3 ஆவது இடத்திலும் உள்ளன.

ஐ.சி.சி. கிண்ணத்தை வென்ற மேற்கிந்தியத்தீவுகள் 107 புள்ளிகள் பெற்று 4 ஆவது இடத்திலும், இங்கிலாந்து 5 ஆவது இடத்திலும் பாகிஸ்தான் 6 ஆவது இடத்திலும், தென்னாபிரிக்கா 8 ஆவது இடத்திலும், சிம்பாப்வே 9 ஆவது இடத்திலும், கென்யா 10 ஆவது இடத்திலும், பங்களாதேஷ் கடைசி இடத்திலும் உள்ளன.

# வடமராட்சி வலயமட்ட உதைபந்தாட்ட போட்டிகள்

வடமராட்சி பாடசாலைகளுக்கிடையேயான 16,18 வயதுப் பிரிவினருக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் நாளை பி.ப. 2.30 மணிக்கு நடைபெறும் போட்டிகளின் விபரம்-

நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் 16 வயது 'ஈ' பிரிவில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியை எதிர்த்து வல்வெட்டித்துறை சிதம்பரா கல்லூரியும்,

16 வயது 'ஏ' பிரிவில் இமையாணன் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையை எதிர்த்து வல்வெட்டி இந்து தமிழ்க்கலவன் பாடசாலையும், 18 வயது 'சி' பிரிவில் கொற்றாவத்தை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையை எதிர்த்து உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியும் மோதவுள்ளன.

டயமன்ஸ் மைதானத்தில் 16 வயது 'சி' பிரிவில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியை எதிர்த்து கம்பர்மலை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையும், 16 வயது 'பி' பிரிவில் கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரியை எதிர்த்து கொற்றாவத்தை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையும், 18 வயது 'டி' பிரிவில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியை எதிர்த்து கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரியும் மோதவுள்ளன.

பொம்மஸ் மைதானத்தில் 16 வயது 'டி' பிரிவில் கரணவாய் மகா வித்தியாலயத்தை எதிர்த்து தேவரையாளி இந்துக் கல்லூரியும், 16 வயது 'டி' பிரிவில் அல்வாய் வடக்கு பாடசாலையை எதிர்த்து வல்வை சிவகுரு வித்தியாலயமும், 18 வயது 'ஏ' பிரிவில் கரவெட்டி ஞானசாரியார் கல்லூரியை எதிர்த்து வதிரி தேவரையாளி இந்துக் கல்லூரியும் மோதவுள்ளன. (12)

# இலங்கையில் இரு அரசுகள் செயற்பட 12 வேங்கைகளே அத்திவாரமிட்டனர்!

## விரிவுரையாளர் குமரவேல் உரை

இலங்கையில் இரு அரசுகள் செயற்பட அடித்தளமிட்டவர்கள் - இந்தப் பன்னிருவேங்கைகளே என யாழ்ப்பாணக் கல்லூரியின் விரிவுரையாளர் குமரவேல் தெரிவித்தார்.

வல்வெட்டித்துறை தீருவிலில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற பன்னிரு வேங்கைகள் நினைவுநாள் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது -

இந்திய அரசு தமிழர்களுக்கு துரோகமிழைக்குமென்பது எமது தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு முன்னரே தெரியும். ஆனால் நாம் அறிந்திருக்கவில்லை .

மக்கள் இந்திய அரசின் சுயபேதத்தை அறியட்டும் என்பதற்காக தேசியத்தலைவர் அன்று ஆயுதத்தைக்கூட ஒப்படைத்து, தமிழ் மக்களின் பாதுகாப்பை இந்தியாவே வழங்கவேண்டும் என்றார்.

எனினும், 1987 ஆம் ஆண்டு இந்தப் பன்னிரு வேங்கைகளையும் கடலிலே கைதுசெய்த இந்தியக் கடற்படை - இவர்களை இலங்கை கடற்படையிடம் ஒப்படைத்து, துன்புறுத்தல்களுக்கு ஆளாக்கியது.

உலகம் உண்மையை அறிய வேண்டும் என்பதற்காக அவர்கள் விசமுண்டு உயிர்நீத்தனர். அன்று எமது மக்கள் மத்தியில் இரண்டு கவலைகள் எழுந்தன.

எம்மைக்காக்குமென நம்பிய இந்திய அரசு துரோகம் செய்து விடடதே என்பது ஒன்று, நாம் ஆயுதமின்றி நிராயுதபாணியாகிவிட்டோமே என்ன செய்வது என்பது மற்றொன்று.

இந்த நிலையிலேயே எமது தலைவர் வகுத்த திட்டங்கள் - இலங்கையிலிருந்து இந்திய இராணுவத்தை அகற்றியதுடன், இன்று இலங்கையில் இரு இராணுவம், இரு அரசுகள், இருகாவல்துறை எனப் பலமான நிலைக்கு தமிழரை வளர்த்துள்ளது.

இன்று எமதுதேசம் விடுதலை அடையும் தறுவாயை எட்டியுள்ளமைக்கு அடித்தள மிட்டவர்கள், இந்தியாவின் நயவஞ்சகத்தை நம்பி நாம் அழிந்துபோகாமல் காத்தவர்கள் இந்தப் பன்னிரு வேங்கைகள்.

இன்று உலகம் முழுவதும் பொய கூறித்திரியும் ஜனாதிபதியும், ஆளும் கட்சியும் ஓர் உண்மையை விளங்க வேண்டும். தமிழ் வீரர்கள் சண்டைக்குச் சளைத்தவர்கள் அல்ல. ஆனால், அழிவுப்பாதையை விரும்புவர்களும் அல்ல என அவர் அங்கு மேலும் தெரிவித்தார்.

(ப,சீ,12)

# சின்னஞ்சிறு செய்திகள்

### கலந்துரையாடல்

தமிழ் இலக்கிய விழா தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இனறு பிற்பகல் 3.30 மணிக்கு யாழ். வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலையில் நடைபெறவுள்ளதால், அனைத்து சென ஜோன்ஸ் அம்புலன்ஸ் அங்கத்தவர்களையும், பொறுப்பாசிரியர்களையும் தவறாது சமூகம் அளிக்கும்படி சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் அத்தியட்சகர் அறிவித்துளளார்.

### கணினிகள் அன்பளிப்பு

கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரிக்கு கல்லூரியின் பழைய மாணவரும், கரவெட்டி கிழக்கு யார்க்கரு விநாயகர் ஆலயத்தின் தொண்டருமான வே.தர்மலிங்கத்தால் 5 கணினிகள் அன்பளிப்புச் செய்யப்பட்டன.

இந்தக் கல்லூரியின் கொழும்பு பழைய மாணவர் சங்கத்தால் - ஒலிபெருக்கித் தொகுதியும், வகுப்பறைக்கான 14 ஒலிவாங்கிகளும் அன்பளிப்புச் செய்யப்படவுள்ளதாகவும் கல்லூரி அதிபர் தெரிவித்தார்.

(12)

### செயற்கைமுறை சினைப்படுத்தல்

கால்நடைகளுக்கான கால்வாய் நோய் கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளதால், இதுவரை கால்நடைகளை எடுத்துச் செல்வதற்கு இருந்த தடை நீக்கப்பட்டு, முன்னர் இருந்த நடைமுறைகள் வழமைக்குத் திரும்பியுள்ளதாகவும், செயற்கைமுறைச் சினைப்படுத்தல் இன்று முதல் வழமைபோல இடம்பெறுமெனவும் கரவெட்டி கால்நடை வைத்திய அதிகாரி எம்.சறோஜினிதேவி தெரிவித்தார்.

### அனுமதியின்றி கட்டடங்கள் கட்டுவோருக்கு எதிராக நடவடிக்கை

(வடமராட்சி)

வடமராட்சி தெற்கு, மேற்குப் பிரதேசசபை எல்லைக்குள் பிரதேச சபையின் அனுமதியின்றி மதில்கள், மலசலகூடங்கள், வீடுகள், கடைகள் என்பவற்றைப் புதிதாகக் கட்டுபவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுமென வடமராட்சி தெற்கு, மேற்குப் பிரதேச சபை அறிவித்துள்ளது.

சுதுமலை நாமகள் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டுப் போட்டியில் மாணவி ஒருவருக்கு இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட கமலாம்பிகை சான்றிதழ் வழங்குவதைப் படத்தில் காணலாம்.

(91)



### சிறுவர், முதியோர் தின நிகழ்வுநாள்

சர்வதேச சிறுவர், முதியோர் தினத்தை முன்னிட்டு இன்று பிற்பகல் 2 மணிக்கு கோப்பாய் பிரதேச செயலகத்தில் விசேட நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

கோப்பாய் பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன் தலைமையில் நடை பெறவுள்ள இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஆசிவசுவாமி கலந்துகொள்ளவுள்ளார்.

கௌரவ விருந்தினராக யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி கலந்துகொள்ளவுள்ளார்.

இங்கு சிறுவர், முதியோர் கௌரவிப்பும் நடைபெறுமெனத் தெரிவிக்கப்படுகிறது. (ப)

# ஆசிரியர் இடமாற்றம் தொடர்பாக இன்று கலந்துரையாடப்படவுள்ளது

(யாழ்ப்பாணம்)

ஆசிரியர்கள் இடம் மாற்றம் சம்பந்தமான முக்கிய கலந்துரையாடல் இன்று யாழ். உயர்கல்விப் பணிமனையில் இடம் பெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் - ஐந்து வருடங்களுக்கு மேல் ஒரே இடத்தில் பணியாற்றுபவர்கள் வேறு பிரதேசங்களுக்கு இடமாற்றம் செய்யப்படுவதைக் கட்டாயமாக்குதல் மற்றும் பின் தங்கிய பிரதேசங்களில் ஆசிரியர்களுக்கான இடமாற்றம் ஏற்படும்போது அந்த விடங்களை நிரப்ப ஏனைய வலயங்களைச் சேர்ந்த ஆசிரியர்கள் - பின்னடிக்கும் நிலையே தற்போது உள்ளதாகவும், அந்த நிலையை மாற்றுதல் தொடர்பாகவும் ஆராயப்படவுள்ளது.

இதில் மேலதிகக் கல்விப்பணிப்பாளர், வலயக்கல்விப் பணிப்பாளர், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டு இந்த விடயம் சம்பநதமாக கலந்துரையாடவுள்ளனர்.

விசேடமாக தீவுப்பகுதியில் 47 இற்கும் மேற்பட்ட ஆசிரியர் ஐந்து வருடங்களுக்கு மேலாக கடமை புரிந்து தற்போது இடமாற்றம் கோரியுள்ளனர். இருந்தும் அந்த வெற்றிடத்தை நிரபப முடியாதுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

# கத்தோலிக்க திருமறைத் தேர்வு நடைபெறும் திகதியில் மாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மறைமாவட்டத்தில் பாடசாலை மட்டத்தில் நடத்தப்படவிருந்த கத்தோலிக்க திருமறைத் தேர்வு நடைபெறும் திகதி மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக, யாழ். மறைக்கல்வி நிலையத்தினர் தெரிவித்தனர்.

அதன்படி யாழ்.மாவட்டப் பாடசாலைகளில் யாழ். மறைக்கல்வி நிறுவனத்தினரால் ஒக்ரோபர் 23 ஆம் திகதி நடத்தப்படவிருந்த கத்தோலிக்க திருமறைத் தேர்வுகள் யாவும் இந்த மாதம் 16 ஆம் திகதிக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இந்தத் தேர்வுகள் யாவும் 16 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகும். அன்றைய தினம் 11 ஆம் வகுப்புக்குரிய மாணவர்களுக்கு மட்டும் பிற்பகல் 1 மணி முதல் 3.30 மணி வரை பரீட்சைகள் இடம்பெறும்.

கடந்த வாரம் இடம்பெற்ற மறையாசிரியர்களுக்கான கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே, இயக்குனர் அருட்பணி ஜோன் மௌலிஸ் இந்த விபரத்தைத் தெரிவித்தார்.

எனவே இதற்குரிய பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் அனைவரும் - மாணவர்களைப் பரீட்சைக்குத் தயார்படுத்துமாறு யாழ்.மறைக்கல்வி நிலையத்தினர் தெரிவித்தனர்.

(கு)

# யாழ். மாவட்ட பொது அமைப்புகள் உடன் பதிவுகளை மேற்கொள்ளவும்

## பொது அமைப்புகளின் ஒன்றியம் அறிவிப்பு

யாழ் மாவட்டத்திலுள்ள அனைத்து பொது அமைப்புக்களும் இன்றுமுதல் பதிவு மேற்கொள்ள வேண்டுமென யாழ். மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் -

விடுதலைப் போராட்டத்துக்காக தமிழினம் பெறுமதிமிக்க உயிர்களைத் தியாகம் செய்துள்ளது. தென்னிலங்கை இனவெறி ஆட்சியாளர்களால் தமிழினம் தொடர்ந்து ஒடுக்குமுறைக்கு ஆளாகி வருகிறது.

போர் அனர்த்தங்களினால் எமது மக்களும், பல பொது நிறுவனங்களும் கடும் பாதிப்புக்குள்ளாகியுள்ளன. இவர்கள் அன்றாடம் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் ஏராளம். இதற்காக யாழ்ப்பாண மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் குரல் கொடுத்துக்கொண்டிருப்பது யாவரும் அறிந்ததே.

இன்றைய சூழ்நிலையில் யாழ். மாவட்டத்திலுள்ள பொது அமைப்புகள் யாவும் - ஓரணியில் திரண்டு எமது பலத்தை வெளிப்படுத்த வேண்டுமென்பது காலத்தின் தேவை. ஆதலால், யாழ். மாவட்டத்தில் இயங்கி வருகின்ற பொது அமைப்புகள் யாவும் - யாழ். மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியத்தில் தமது அமைப்பை இன்று தொடக்கம் எதிர்வரும் 20 ஆம் திகதிக்குப் பிந்தாமல் பதிவு செய்துகொள்ள வேண்டும்.

595, காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள இந்த ஒன்றியத்தின் அலுவலகத்தில் ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை விண்ணப்பப்படிவங்களைப் பெற்று, பதிவை மேற்கொண்டு பதிவுச் சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ளவும்.

பின்வரும் அமைப்புகள் பதிவு பெறத்தகுதியுள்ளன. மத அமைப்புகள், பொது அமைப்புகளின் ஒன்றியங்கள், தொழிற்சங்கங்கள், சனசமூக நிலையங்கள், கிராம முன்னேற்றச் சங்கங்கள், தனியார் சிற்றூர்தி சேவைச் சங்கங்கள், முச்சக்கரவண்டி சங்கங்கள், கூட்டுறவுச் சங்கங்கள், சமாசங்கள், வர்த்தக சங்கங்கள், சிகை அலங்கரிப்பாளர் சங்கங்கள், வெண்மை வாணிப சங்கங்கள், விடுதி உரிமையாளர் சங்கங்கள், காணாமற போனோர் சங்கம், கல்வி நிறுவனங்கள், தனியார் கல்வி நிறுவனங்கள், விவசாய சம்மேளனங்கள், ஊழியர் நலன்புரிச் சங்கங்கள், ஆலய தர்மகர்த்தாசபை, பரிபாலன சபையினர், விளையாட்டுக் கழகங்கள், சாரணிய சங்கங்கள், மாணவர் ஒன்றியங்கள், சமாதான நீதிவான் சங்கம், இடம் பெயர்ந்த நலன்புரிச் சங்கங்கள், சட்டத்தரணிகள் சங்கம் என்பன இங்கே குறிப்பிடத்தக்கது.

இதில் குறிப்பிடப்படாத அமைப்புக்கள் இயங்கினால் அவற்றை எமது கவனத்துக்குத் தந்து பதிவை மேற்கொள்ளவும்.

அமைப்புகள் அனைத்தும் தனித்தனியாகத் தங்கள் பதிவை மேற்கொள்ள வேண்டுமென யாழ். மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியம் இந்த அறிக்கை மூலம் கேட்டுக்கொண்டுள்ளது.

# மாணவர்களிடையே உதைபந்தாட்டம் பல்வேறு திறன்களை வளர்க்கின்றது

## தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் உரை

(யாழ்ப்பாணம்)

உதைப்பந்தாட்ட விளையாட்டானது மாணவர்களிடையே - வீரர்களிடையே கூட்டுறவுப் பண்பு, தலைமை தாங்கும் பண்பு போன்வற்றை வளர்த்தெடுக்கக் கூடிய ஒரு விளையாட்டாக உள்ளது.

ஒரு அணியிலே விளையாடும் பதினொரு வீரர்களும் குழுவாக ஒன்றுபட்டு செயற்படும் போதிலேயே, தமது திறன்களை வெளிப்படுத்தும் போதிலேயே வெற்றியைப் பெறக் கூடியதாக இருக்கிறது என தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா தெரிவித்தார்.

அண்மையில் கொடிகாமம் அரசினர் வித்தியாலய இராசா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற தென்மராட்சி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டிகளில் இறுதிப் போட்டி நிகழ்வுக்கு தலைமை தாங்கி உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் அவர் தனது உரையின் போது -

எமது வலயப் பாடசாலைகளில் இருந்து அறுபது வரையான குழுக்கள் பங்குபற்றிய இந்த உதைபந்தாட்டப் போட்டி வெகு சிறப்பாக நடைபெற்று முடிந்தமை மகிழ்வைத் தருகிறது.

காற்பந்தாட்டம் ஒரு வித்தியா சமான விளையாட்டு. மாணவர்களிடையே பல்வேறு திறன்களை வளர்த்துவிடக்கூடிய விளையாட்டு இது.

இங்கு பங்குபற்றிய மாணவ வீரர்களுக்கு எதிர்காலத்தில் மேலும் மேலும் பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும்.

எமது வலயத்தில் இந்த விளையாட்டு மேலும் மேம்படுத்தப்படல் வேண்டும். உண்மையில எமது பாடசாலைகளில் வசதிமிக்க மைதானங்கள் இல்லாதிருப்பது பெரிய குறைபாடாகவே இருக்கிறது.

ஒரு சில பாடசாலைகளிலுள்ள மைதானத்தைப் பயன்படுத்தியே எமது மாணவர்கள் விளையாட்டுகளில் பயிற்சி பெறவேண்டிய நிலை காணப்படுகிறது.

ஒவ்வொரு பாடசாலைகளிலும் மைதானம் அமைக்கப்பட எதிர்காலத்தில் நாம் முன்னுரிமை கொடுக்க வேண்டி உள்ளது.

மெய்வல்லுநர் போட்டி, உதைபந்தாட்டப் போட்டி என்பன மாவட்டம், மாகாணம், தேசியம் என்ற ரீதியில் நடாத்தப்படுவதனால், எமது மாணவர்களுக்கு போதிய பயிற்சிகள் வழங்கப்படுவது அவசியமாகின்றது.

அதற்கு மைதான வசதி அவசியம், எதிர்காலத்தில் பாடசாலைச் சமூகமானது, தமக்கென ஒரு மைதானத்தை விருத்திசெய்து கொள்ளும் நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும் என அவர் தனதுரையில் தெரிவித்தார்.

(31)

# பட்டயக் கணக்காளர் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

இலங்கைப் பட்டக் கணக்கறிஞர் நிறுவனம் ஆரம்பநிலைப் பரீட்சைகள், மற்றும் இடைநிலைப் பரீட்சைக்காக தகுதி பெற்ற பதிவு செய்த மாணவர்களிடம் இருந்து விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

ஆரம்ப நிலைப் பரீட்சைகள், எதிர்வரும் ஆண்டு ஜனவரி மாதம் 22, 23 ஆம் திகதிகளிலும், இடைநிலைப் பரீட்சைகள் எதிர்வரும் ஜனவரி 29, 30, 31 ஆம் திகதிகளிலும் நடாத்தப்படவுள்ளது.

இந்தப் பரீட்சைக்கான விண்ணப்பங்களை இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவனத்தில் நேரடியாக அல்லது ரூ.4.50 சதம் பெறுமதியான முத்திரை ஒட்டிய சுயமுகவரி எழுதிய கடித உறையை அனுப்பியும் பெற்றுக்கொள்ள முடியும்.

விண்ணப்பங்கள் யாவும் எதிர்வரும் நவம்பர் மாதம் 5 ஆம் திகதிக்கு முன்பாக பிரதிப்பணிப்பாளர், பரீட்சைப் பிரிவு, இலங்கைப் பட்டயக்கணக்கறிஞர் நிறுவனம், 30 ஏ, லொங்டன் பிளேஸ், கொழும்பு - 7 என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும். (3)

# தென்னை மரங்களை தாக்கும் நோய்கள்!



## பொருண்மியம்

(சென்றவாரத் தொடர்ச்சி...)

### தென்னோலையில் புள்ளிவிழும் நோயைத் தடுக்கும் முறை

தென்னை மரத்தின் பலத்துக்குக் காரணமான பொட்டாசியம் போசாக்குக் குறையும்போது, இந்த நோய் ஏற்படுகிறது. மேற்குறிப்பிட்ட போசாக்குக் குறைவினால் பங்கஸின் பாதிப்பு சுலபமாகத் தொற்றுகிறது. எனவே, உரிய காலத்தில் உரம் தகுந்தவாறு பாவிப்பதன் மூலம் இதனைத் தடுத்துக்கொள்ள முடியும்.

தென்னை மரங்கள் பலவீனமாக இருந்தால், தென்னங்கன்றுகளாயின், மியுரியெட் ஒப் பொட்டாஸ் 250 கிராம் போடலாம். வளர்ச்சி அடைந்த தென்னை மரங்களாயின், 500 கிராம் போட வேண்டும். நோயின் பாதிப்பு அதிகமாக இருந்தால் 1% சி.யு அல்லது போடா கலவையையும் தெளிக்க வேண்டும்.

### 4. தென்னை மரங்கள் சோடையாதல் நோய்



பின்வரும் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட காரணங்களால் இந்த நோய் ஏற்படலாம்.

- ♦ பலகாலம் தென்னை மரத்தைக் கவனியாது விடல்.
- ♦ நீர் தேங்கி இருத்தல்.
- ♦ பலகாலம் மண்ணில், ஈரத்தன்மை இல்லாமல் இருத்தல்
- ♦ தென்னை மரத்தின் வேர்ப்பகுதி மண் இறுக்கமாக இருத்தல்
- ♦ மக்னீசியம் குறைபாடு போன்றவையாகும்.

### நோயின் அறிகுறிகள்

கீழ்ப் பக்கம் உள்ள தென்னோலைகள் கீழ்ப் பக்கமாகச் சுருளும் அல்லது காய்ந்து போகும். விளைச்சல் குறையும். தேங்காய்கள் நீளமான தோற்றத்தில் காணப்படும்.

### தடுக்கும் முறை

மேற்கூறப்பட்ட அறிகுறிகள் காணப்படும் மரங்களை, பின்வரும் முறைமூலம் பாதுகாத்துப் பயனைப் பெற்றுக்கொள்ள முடியும். இந்த முறையின் நோக்கம் மரத்தின் உக்கிய வேர்களுக்குப் பதிலாகப் புதிய வேர்களை வளர்ச்சி காண வைப்பதாகும்.

இதற்காகத் தென்னை மரத்தடியில் இருந்து 3-5 அடி தூரத்தில் 1 1/2 அடி உயரத்துக்குத் தேங்காய்ப் பொச்சுக்களை உபயோகித்து மரத்தைச் சுற்றி வரம்பு ஒன்றை அமைக்க வேண்டும்.



அந்த வரம்புக்கும், தென்னை மரத்துக்கும் இடைப்பட்ட பிரதேசத்தில் காபனிக் உரம் போடவேண்டும்.

பின்னர் உரம் பாவிக்கும்போது இந்த இடத்தில் அவற்றைப் போட்டு, மண்ணுடன் கலக்க வேண்டும். சில நேரங்களில் நன்கு பராமரிக்கப்படும் தென்னந் தோப்புகளில்கூட இவ்வாறான தென்னைகள் ஓரிரண்டைக் காணலாம். இது ஒருவகை பங்கஸினால் ஏற்படுகிறது.

சசி சந்திரகாசன்

# சுற்றாடலின் உயிர்ப்பன்முகத் தன்மையுடன் தொடர்புபட்ட சேதன விவசாயத்துறை

இரசாயன அல்லது செயற்கை முறையிலான பசளையைப் பாவித்து விவசாயத்தில் ஈடுபடுவதன் பிரதிகூலங்களானது - இன்று மீண்டும் சேதன விவசாயத்தின் முக்கியத்துவத்தைப் பற்றிச் சிந்திக்க வைத்துள்ளது. விவசாய முறையில், சேதனக் கோட்பாட்டு முறைகளை இணைப்பதன் மூலம் சுற்றாடல், சமூக, பொருளாதார நன்மைகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

சேதன விவசாயச் செய்கையானது- இரசாயன அல்லது செயற்கையாகக் கலவை செய்யப்பட்ட பசளை, கிருமி கொல்லிகள், செயற்கை விருத்திகள், செயற்கை ஹோர்மோன்கள் போன்றவற்றைப் பயன்படுத்தி, விவசாயம்/ பயிர்ச்செய்கையில் ஈடுபடுவதைத் தவிர்த்து மூலிகைகள், நுண்ணுயிர்கள், மண்ணுயிர்கள், விலங்குகளைத் தொடர்புபடுத்தி உற்பத்தியை மேற்கொள்ளும் ஒரு பயிர்ச்செய்கை முறையாகும்.

தாவர வலுவூட்டிகளை உற்பத்தி செய்தல், கிருமிகளையும், களைகளையும் அழித்தல், நுண்ணுயிர்களை அழித்தல் ஆகியவற்றைத் தவிர்த்துத் தட்டுமாறும் முறைப் பயிர்ச்செய்கை, அவரைத் தாவரங்களின் இலைப்பசளை, பண்ணையிலிருந்து அப்புறப்படுத்தப்பட வேண்டிய சேதனக் கழிவுகள், உயிரியல் பீடை கொல்லிகள் போன்றவற்றில் சேதன விவசாயம் நம்பிக்கை வைத்துள்ளது.

நிலைத்திருக்கும் விவசாய உற்பத்திக்கும், வினைத்திறன் அதிகரிப்புக்கும் ஒரு தீர்வாக இந்த உற்பத்திவழி இன்று உலகம் பூராகவும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. போசாக்கான, தரம்கூடிய விவசாய உணவு வகைகளை உற்பத்திசெய்தல், இயற்கைத் தொகுதிகளின் மீது பாதிப்பை ஏற்படுத்தாது பாதுகாத்தல், சுற்றாடலுக்கு ஏற்படக்கூடிய பாதிப்பை இழிவளவாக்குதல், மீண்டும் புதுப்பிக்கமுடியாத வளங்களின் பாவனையை இழிவளவாக்குதல் போன்றவை சேதன விவசாயத்தின் பிரதான அடிப்படைகளாகும்.



அதற்குப் பதிலாக அவற்றின் ஒத்துழைப்புடன் செயற்படுதல், மண் வளத்தைப்

இந்தச் சேதன விவசாய முறையில் நிலைத்திருக்கும் தன்மையை நிரூபிக்கும் அம்சங்கள் இருந்த போதிலும்கூட, சில காரணிகளால் இந்த முறையானது தடைகளை எதிர்கொள்ள வேண்டியநிலை, அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் உள்ளது. அவற்றில் சில தடைகளாகப் பீடைகள், நோய்கள் தொடர்பான உறுதிப் பாடின்மை, சந்தைப்படுத்தலில் உள்ள பிரச்சினைகள், நுகர்வோர் விழிப்பூட்டப்படாமை, ஊழியம், காணி போன்ற வளங்களின் பற்றாக்குறை போன்றவற்றைக் குறிப்பிடமுடியும்.

ஊழியச் செலவு காரணமாக சேதன விவசாயம் சிரமமான ஒரு உற்பத்தி முறையாக மாறியுள்ள போதிலும், சேதன விவசாய நாடுகளில், இந்த உற்பத்திகளுக்கான கேள்வி உயர் நிலையிலேயே உள்ளது. ஐரோப்பாவில் சேதன விவசாய உற்பத்திகளுக்கான கேள்வி நிரம்பலை மிஞ்சியிருப்பதனால், விலைகள் உயர் பெறுமானத்தைக் காட்டும் போக்கு ஏற்பட்டுள்ளது. அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் சேதன விவசாய உற்பத்திகளுக்கான விலை உறுதிப்பாடுகொண்ட சந்தை இன்னும் விருத்தியடையவில்லை. எவ்வாறாயினும், உள்ளீடுகளின் குறிப்பாக விவசாய இரசாயனப் பொருட்களின், அதிகரித்துவரும் விலை காரணமாக உற்பத்திச் செலவு கூடியும், இலாப அளவு குறைந்தும் இரசாயன விவசாயத்தில் ஈடுபடும் சிறு விவசாயிகளுக்குப் பாரிய சுமையாக மாறியுள்ளது. சேதன விவசாய உற்பத்திமுறை இத்தகைய விவசாயிகளுக்கு சுயதேவைப் பூர்த்திக்கான ஒரு சிறந்த மாற்று வழியாகும்.

**சேதன விவசாயத்தின் அனுகூலங்கள்-**

1. சமநிலைச் சுற்றாடல்.
2. நுகர்வோருக்கான சுகாதாரமான உணவு.
3. நிலைத்திருக்கும் மண் வளம்.

### 1. சமநிலைச் சுற்றாடல்

எந்தக் கட்டுப்பாடுகளுமின்றி, விவசாய இரசாயனங்களையும், பசளை வகைகளையும் உபயோகிப்பதனால் விவசாயத்துக்கு நன்மை பயக்கும் நுண்ணுயிர்கள் மீது இவை மோசமான விளைவுகளை ஏற்படுத்துகின்றன. இந்த நிலைமையானது- இயற்கைச் சூழல் தொகுதியின் சமநிலையை இல்லாமல் செய்வதுடன், குறிப்பிட்ட பிரதேசங்களிலுள்ள காணிகளின் உயிர்ப் பன்முகத்தன்மையை அழித்தும் விடுகின்றது. விவசாயத்தின் நீண்டகாலப்பேணுகைக்கு உயிர்ப் பன்முகத்தன்மை என்பது இன்றியமையாத ஒரு காரணியென அறியப்பட்டுள்ளது.

மேலை நாடுகளும், ஏனைய வளர்ச்சியடைந்த நாடுகளும் இத்தகைய இரசாயன விவசாயத்தின் ஆபத்தைத் தற்பொழுது உணரத் தலைப்பட்டுள்ளன. பரந்த ரீதியிலும், அதிகமாகவும் பயன்படுத்தப்படும் விவசாய இரசாயனப் பொருட்களான

- **கிருமிநாசினிகள்**
- **பங்கசு கொல்லிகள்**
- **களைகொல்லிகள்**

நீண்டகால பின் விளைவுகளைத் தோற்றுவித்து, கடுமையான சுற்றாடல் மற்றும் சுகாதாரக் கேடுகளை ஏற்படுத்தும். சேதன விவசாயமானது - பீடை கொல்லிகளை அழிப்பதற்கான உதவியை முழுமையாக நம்புவது இயற்கைக் காரணிகளின் மீதாகும். இந்தக் காரணிகள், படிமுறைகளினால், சூழற் சமநிலைக்கு நன்மைபயக்கும் நுண்ணுயிர்கள் பாதுகாக்கப்படுகிறது. சுற்றாடலின் பல்வகைமை பாதுகாக்கப்படுவதனூடாகப் பயிர்கள் நோய்களின் தாக்கத்துக்கு உட்படுவது குறைவடைகிறது.

### 2. நுகர்வோருக்கான சுகாதாரமான உணவு

இந்த விவசாய முறையின் குறிப்பிடத்தக்க அம்சம் யாதெனில், நுகர்வோருக்கு இரசாயனம் கலக்காத விவசாய உணவுகள் கிடைப்பதாகும். சந்தையில் காணப்படும் பெரும்பாலான விவசாய உணவு வகைகளின் உற்பத்தியில் இரசாயனத் தாக்கத்தின் பாதிப்புக் காணப்படுகிறது.

சூழலைச் சமநிலைப்படுத்தும் நுண்ணுயிர்களை நிலைக்கச் செய்வதன் மூலமாக சேதன விவசாயத்தின்போது பீடை, நோய்த் தடுப்பு முறைகள் நிறைவேற்றப்படுகிறது. அத்துடன், இயற்கையான சாறுகளின் உபயோகம் மூலமும், இந்தப் பணி நிறைவேற்றப்படுகிறது. இவை பயிர்களின்மீது படிந்திராது, மிக விரைவில் நீங்கி விடுகிறது. எனவே, இந்தச் செயலினூடாக விவசாய உற்பத்தியின் சுகாதாரம் பேணப்படுகிறது.

### 3. நிலைத்திருக்கும் மண் வளம்

மண்ணை வளமாக்குங்கள், பயிரையல்ல. என்றே சேதன விவசாயம் வலியுறுத்துகின்றது. சேதனப் பசளையின் முக்கிய உள்ளடக்கமானது, கலவை செய்யப்பட்ட விலங்குப் பசளையும், பல்வேறு தாவரக் கழிவுகளும் நைதரசனை உறுதிப்படுத்தும் தாவர வகைகளுமாகும்.

(தொடரும்...)

# குடாநாட்டு சந்தை நிலவரம்

| பொருட்கள் | பருத்தித்துறை | சுன்னாகம் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | மருதனார்மடம் | சங்கானை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|---|---|---|
| பயிற்றங்காய் | 20/= | 20/= | 40/= | 50/= | 30/= | 30/= | 40/= |
| வெண்டிக்காய் | 30/= | 10/= | 15/= | 20/= | 20/= | 20/= | ✸ |
| உருளைக்கிழங்கு | 70/= | 65/= | 55/= | 60/= | 70/= | 65/= | 60/= |
| கத்தரிக்காய் | 25/= | 35/= | 35/= | 40/= | 50/= | 40/= | 40/= |
| பாகற்காய் | 40/= | 30/= | 30/= | 40/= | 40/= | 35/= | 40/= |
| கரட் | 30/= | 20/= | 30/= | 40/= | 30/= | 30/= | 50/= |
| பீற்றூட் | 20/= | 10/= | 15/= | 20/= | 20/= | 10/= | 20/= |
| முருங்கைக்காய் | 30/= | 30/= | 40/= | 50/= | 50/= | 40/= | 60/= |
| வெங்காயம் | 30/= | 20/= | 30/= | 35/= | 20/= | 25/= | 35/= |
| பச்சை மிளகாய் | 30/= | 30/= | 30/= | 40/= | 30/= | 30/= | 40/= |

# தொழில்மலர்

## வாடிக்கையாளரை முன்னிறுத்தியே ஒரு நிறுவனம் வெற்றியடைகிறது

உற்பத்தித் துறையில் ஏற்பட்டிருக்கும் பல மாற்றங்கள் - வாடிக்கையாளர்களின் தேவையை நிறைவு செய்யவே அமைக்கப்பட்டுள்ளது. வர்த்தக உலகமே இன்று வாடிக்கையாளர்களை முன்னிறுத்தித்தான் செயற்ப்படுகிறது. இவ்வாறு வாடிக்கையாளர்களை முதன்மைப்படுத்தும் ஒரு நிறுவனத்தின் அணுகுமுறைகளை தெரிந்து கொள்வது நன்மை பயக்கும்.

வாடிக்கையாளரை முன்னிறுத்தும் நிறுவனம் - அவர்கள் வேண்டிய பொருளை, அவர்கள் வலியுறுத்தும் தரத்தில் தர, தன்னை முற்றிலும் தயார்படுத்திக் கொள்கிறது. இதனைத் தொடர்ந்து எவ்வாறு நடைமுறைப்படுத்துவது.

கீழே கூறப்படும் 7 முறைகளைக் கடைப்பிடிப்பதனூடாக ஒரு நிறுவனம் இதனைத் தொடர்ந்து நடைமுறப்படுத்துகிறது.

✷ வாடிக்கையாளரைத் தொடர்ந்து தக்க வைத்தக் கொள்ளும் இலட்சிய நோக்கு.

✷ நிறுவனத்தின் எல்லா இடங்களிலும், செயல்பாடுகளிலும் வாடிக்கையாளரின் குரலை ஒலிக்கச்செய்வது.

✷ தனது துறையில் வெற்றியாளர்களாகத் திகழ்வோரிடமிருந்து பாடங்கள் கற்பது.

✷ வாடிக்கையாளரைத் திருப்திப்படுத்தி செயற்படுபவர்களுக்கு முழு ஊக்கம் கொடுப்பது.

✷ வாடிக்கையாளரின் மனநிறைவு நிலையைத் தொடர்ந்து அளவிடுவது.

✷ வாடிக்கையாளரைத் தக்க வைத்துக் கொள்ளச் செய்யும் பணிகளில் ஏற்படும் தடைகளை உடைத்தெறிவது.

✷ தொடர்ந்து சொன்னபடியே செயல்படுவது.

மேற்கூறப்பட்ட ஒவ்வொன்றையும் தனித் தனியாக விரிவாகப் பார்ப்போம்

### 1. இலட்சிய நோக்கு

நூறு ஆண்டுகளுக்கு முன்னர் கப்பல் கட்டும் நிறுவனம் ஒன்றின் தலைவர் தனது இலட்சிய நோக்கை ஒரு கவிதையாக வெளிப்படுத்தினார்.

"நாம் நல்ல கப்பல்களையே கட்டுவோம், இலாபத்துடன் முடிந்தால்; ஒரு வேளை இழப்பு திணிக்கப்பட்டாலும், எப்பொழுதுமே நல்ல கப்பல்களையே கட்டுவோம்."

தனது இலட்சிய நோக்கை - தரமான கப்பல்களை மட்டுமே கட்டுவதை அழுத்தமாகச் சொன்ன அந்தத் தலைவரின் தலைமையில், அந்த நிறுவனம் வேகமாக வளர்ந்தது.

நட்டமடைந்திருந்த 'பிரிட்டிஷ் ஏர்வேஸ்' நிறுவனத்தின் தலைவர் அதனைச் சீராக்கப் 'பயணிகளை முன்னிலைப்படுத்துங்கள்' என்ற இலட்சிய நோக்கை முன்வைத்தார்.

இந்த விமானத்தில் பயணிக்கும் பயணிகளே இந்த நிறுவனத்தின் வாடிக்கை



யாளர்கள். அந்த நிறுவனம் படிப்படியாக இலாபம் அடைந்தது.

வாடிக்கையாளர்கள் தோல்வி அடைந்து, தாம் மட்டும் வெற்றி பெற்ற நிறுவனங்கள் இருந்ததாக வரலாறு இல்லை. வாடிக்கையாளர் மனநிறைவடைந்து, ஒரு நிறுவனமும் வெற்றி அடையும் போதுதான் இருவருக்கும் வெற்றி என்ற நிலை வந்தடையும்.

ஒரு தலைவர் தனது நிறுவனத்துக்கு இலட்சிய நோக்கை உருவாக்கும்போது, அந்த இலட்சிய நோக்கில் வாடிக்கையாளருக்கும் ஒரு முக்கிய இடம் இருக்க வேண்டும்.

### 2. வாடிக்கையாளரின் குரல் - எல்லா இடங்களிலும்

'தொழில் என்பதே வாடிக்கையாளரைத் திருப்திப்படுத்தும் ஒரு செயல்தான். பொருட்களை உற்பத்தி செய்யும் செயல் அல்ல'

என் ஒரு பேரறிஞர் தொழிலைப்பற்றி அற்புதமான விளக்கம் தருகிறார். வாடிக்கையார் மனநிறைவடைய, உற்பத்தி செய்யும் பொருட்கள் உதவுகின்றன. எனவே, வாடிக்கையாளரின் குரல் நிறுவனத்தின் ஒவ்வொரு செயற்பாட்டிலும் ஒலிக்க என்ன செய்ய வேண்டும்?

முதல் படி - யார் உங்கள் வாடிக்கையாளர்கள் என்று அடையாளம் கண்டு கொள்ள வேண்டும்.

ஒரு நிறுவனத்துக்கு மூன்று விதமான வாடிக்கையாளர்கள் இருக்கிறார்கள். கடைசியாகப் பொருளைப் பயன்படுத்தும் **நுகர்வோர்.**

ஒரு வாடிக்கையாளரை நுகர்வோரை பொருள் சென்றடைய உதவி செய்யும் **இடை நிலை வாடிக்கையாளர்கள்.**

மூன்றாவதாக, குறித்த நிறுவனத்திலேயே அந்தப் பொருளை உருவாக்க பல நிலைகளில் **பணிபுரியும் வாடிக்கையாளர்கள்.**

இந்த மூன்று வாடிக்கையாளர்களும், அவர்களுடைய குறிப்பிட்ட தேவைகளும் அந்த நிறுவனத்தால் முழுதும் அறியப்பட வேண்டியவை ஆகும்.

இரண்டாவது படி - இந்த வாடிக்கையாளர்களைப் பற்றி அறிந்து கொள்வது.

வாடிக்கையாளரின் தேவைகள் ஒரே நிலையில் இருப்பதில்லை. அவை காலப்போக்கிற்கேற்ப மாறிக்கொண்டே இருக்கும். சில தேவைகளையும், எதிர்பார்ப்புக்களையும் வாடிக்கையாளர்களே உருவாக்கிக் கொள்கிறார்கள்.

சில தேவைகள் அறிவியல் கண்டுபிடிப்புக்கள் அவர்களுக்கு உருவாக்கிக் கொடுக்கப்படுகிறது. எனவே, வாடிக்கையாளரின் இன் றைய வருங்கால தேவைகள், எதிர்பார்ப்புக்கள் பற்றித் தொடர்ந்து அறிந்துகொள்ள வேண்டும்.

**மூன்றாவது படி** - வாடிக்கையாளர்களின் தேவைகளை நிறைவு செய்வதையே தமது வெற்றியின் அளவாகக் கொள்வது.

வாடிக்கையாளர்களைத் தமது தொழிலின் கூட்டாளிகளாகக் கருதும் எண்ணம் ஒரு நிறுவனத்துக்கு உருவாகவேண்டும். கூட்டாளியாக நினைக்கும் போதுதான் கருத்துப் பரிமாறல் தெளிவுடனும், தடங்கலின்றியும் இருக்க முடியும். இந்த நிலையில் தான் எந்த அளவீடும் உண்மையில் அடிப்படையில் சரியாகவும் பயனுள்ளதாகவும் இருக்கும்.

### 3. வெற்றியாளர்களிடமிருந்து பாடம்

சிறந்த நிறுவனங்கள் தாங்கள் மேன்மேலும் முன்னேற வேண்டும், நீக்கப்படவேண்டிய பல குறைகள் இன்னும் இருக்கின்றன என்று தீவிரமான நம்பிக்கை கொண்டவை. 'எம்மிடம் குறையே இல்லை' என்று ஒரு நிறுவனம் நினைக்கும்போது, அங்கு வளர்ச்சி நின்று போகின்றது.

செயலில் சிறந்த நிறுவனங்கள் தங்களது அனுபவங்களிலிருந்து பாடம் கற்றுக்கொள்வதோடல்லாமல், ஏனைய சிறந்த நிறுவனங்களின் செயல்பாடுகளிலிருந்தும் புதிய பாடங்களைக் கற்றவண்ணம் இருக்கின்றன.

**உதாரணமாக -**

எவையெல்லாம் இன்றைய சிக்கல்கள் என்று பட்டியல் போடவேண்டும். பின்னர் அந்தச் சிக்கல்களைத் தீர்த்து, வெற்றி கண்ட நிறுவனங்கள் எவை என்று பட்டியல் போட்டுக்கொள்ள வேண்டும். ஆராய்ந்தோ அல்லது வேறு மூலகமூடாகவோ அந்தப் பிரச்சினைகளை எவ்வாறு தீர்த்தார்கள் என்று அறிந்து கொள்ளவேண்டும்.

அந்தப் பிரச்சினைகளின் பாடங்களை ஒரு நிறுவனம் தெரிந்துகொண்டு, தனக்கு உகந்ததைச் செயலாக்கும் போது அவர்களுடைய பிரச்சினைகள் தீர்க்கப்படுகின்றன. ஒரு நிறுவனம் தான் வளர வேண்டுமானால், 'சிறந்த நிறுவனங்களோடு தன்னை ஒப்பிட்டுக்கொள்ளவேண்டும்'.

### 4. வாடிக்கையாளரைப் போற்றிச் செயற்படுபவர்களுக்கு முழு ஊக்கம் தருவது

வாடிக்கையாளர்கள் மனநிறைவடைய முழு முயற்சி மேற்கொள்வதைப் பற்றிப் பணியாளர்களுக்கு முழு விளக்கம் தரும் போதுதான், நிறுவனத்தின் நிலை பற்றிய தெளிவான கருத்தை அவர்கள் புரிந்து கொள்வார்கள். அவர்களும் அந்த முயற்சிக்கேற்ப செயற்படத் தொடங்குவார்கள்

வாடிக்கையாளர் மனநிறைவு என்பது- எல்லோருடைய மனங்களிலும் ஆழமாக ஊறிப்போக வேண்டும். உள்ளத்தில் அது ஆழமாக இருந்தால் மட்டுமே, செயலாக அது பின்னர் பரிணமிக்கும்.

நிறுவனத்தின் பல குறிக்கோள்களில் தலையானதாக வாடிக்கையாளர் மன நிறைவு என்பது இருக்கவேண்டும். இது ஒவ்வொரு செயலிலும் வெளிப்படுத்தப்படவேண்டும்.

### 5. வாடிக்கையாளர் மனநிறைவு - அளவீடு

வாடிக்கையாளர் மனநிறைவை மேலெழுந்தவாரியாக கருத்து அடிப்படையில் அளவிடக்கூடாது. நேர்த்தியாகச் சரியான முறையில் அளவிடப்பட வேண்டும். அளவீடு இல்லையென்றால் நுகர்வோர் சந்தையில் மேலாதிக்கம் செலுத்த முடியாது.

சில குறிப்பிட்ட நிறுவனத்தில் அக்கறை கொண்ட வாடிக்கையாளர்கள் குழுவின் உதவியுடன்

- **எந்தப் பொருள்/சேவை.**
- **எவ்வாறு அளவீடப்படல் வேண்டும்.**
- **எந்தப் போட்டியாளருடன்.**
- **எந்தெந்த வகையில் ஒப்பீடு செய்யப் படல் வேண்டும்.**

என்று அறிந்துகொள்ள வேண்டும். இவ்வாறு வாடிக்கையாளரின் மனநிறைவை முறைப்படி அளவீடுசெய்துகொண்ட பின்னர், அடுத்து என்ன செய்யவேண்டும் என்று திட்டம் வகுக்க வேண்டும்.

### 6. மனநிறைவு - தடைகள் உடைப்பு-

ஒரு நிறுவனத்தில் இருக்கும் பிரச்சினைகளை அங்கு பணியாற்றும் தொழிலாளர்கள் நூற்றுக்கு நூறு வீதம் அறிவார்கள் என ஒரு ஆய்வின் மூலம் கண்டறிந்துள்ளார்கள். இது ஒரு முக்கியமான ஆயவு.

74 சதவீதப் பிரச்சினை - முதல்நிலை அதிகாரிகளுக்கும், முகாமையாளருக்கும் 9 சதவீத பிரச்சினைகளும் தெரியும். மேல் நிலை முகாமையாளருக்கு, 4 சதவீத பிரச்சினைகள் மட்டுமே தெரியும் என இந்த ஆய்வு கூறுகிறது.

ஆகவே, வாடிக்கையாளர்களை முழுமையாக மனநிறைவடையச் செய்ய முடியாமல் தடுக்கின்ற தடைகள் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டுமானால், ஒரு நிறுவனத்தில் பணிபுரியும் பணியாளர்களைக் கேட்க வேண்டும். புதியன காணும் முயற்சிகள் ஊக்குவிக்கப்பட வேண்டும். பிரச்சினைகளின் மூலகாரணங்கள் அறியப்பட்டு களையப்படும் போதுதான், வாடிக்கையாளர் மனநிறைவு நிலையானதாக இருக்கும்.

### 7. செயல்படுவது.

ஒரு நிறுவனத்தின் தலைமையின் பொறுப்பு மிகத் துல்லியமானதாக இருக்க வேண்டும். வாடிக்கையாளரை எல்லா நேரங்களிலும் முன்னிலைப்படுத்தியே செயல்களை மேற்கொள்ளவேண்டும். புதிய பாடங்களைக் கற்கும் எண்ணம் தலைமையில் தொடங்கவேண்டும். தமது பணியாளர்களையும், வாடிக்கையாளர்களையும் நேசிக்கும் தன்மையை வெளிப்படையாக்க வேண்டும். சிக்கல்களைத் தீர்ப்பதில் எல்லோரையும் பங்கேற்கச் செய்யவேண்டும். நிறுவனத்தின் இலட்சியத்தை ஏற்று, ஒரு நடமாடும் இலட்சியமாகத் தன்னை உருவாக்கிக் கொள்ளவேண்டும். வாடிக்கையாளரை முன்னிறுத்தி வெற்றிகண்ட நிறுவனங்கள் இதனைத்தான் தமது யுக்தியாக பயன்படுத்தின. ☆

## விரும்பிய தொழில் கிடைக்க உங்களைத் தயார்படுத்துங்கள்

நல்ல வேலை என்பது எல்லா இளைஞர்களின் கனவாக இருந்தாலும், சிலருக்கு மட்டுமே அது வாய்க்கிறது. நல்ல வேலை கிடைக்க நாம் எம்மை நன்றாக தயார்படுத்திக் கொள்ள வேண்டும். அப்போதுதான் அது எமக்குக் கிடைக்கும். அப்படி எம்மை தயார் படுத்திக் கொள்ள இந்த விடுமுறையை உபயோகப்படுத்திக்கொள்ளலாம்.

ஒருவர் நேரத்தைச் சரியான முறையில் செலவு செய்து, வேலை வாய்ப்புச் செய்திகள் சேகரிப்பது, திறமைகளை வெளிப்படுத்துவது, ஆர்வங்களைக் கண்டு பிடிப்பது, முடிவுகளை எடுப்பது மற்றும் வளர்ப்பதுமாகும். ஆகவே விடுமுறை நாட்களைச் சரியான வித்த்தில் பயன்படுத்த வேண்டும்.

### வேலைவாய்ப்புச் செய்திகளை சேகரிப்பது

ஒரு குறிப்புப் புத்தகத்தை ஒதுக்கி, அதற்கு வேலை வாய்ப்பு என்ற தலைப்பில் எழுதி எடுத்து வையுங்கள். வேலை வாய்ப்புக்கள் இருப்பது பற்றிய செய்திகளைச் சேகரியுங்கள். வேலை வாய்ப்பு தொடர்பான தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்த்து, அவை கொடுக்கின்ற முக்கிய கருத்துக்களை எழுதிவையுங்கள். வெவ்வேறு தொழில்களில் ஈடுபட்டு வருகின்றவர்களிடம், தேவையான செய்திகளைச் சேகரிக்கவும், பின்பு சேகரித்த வேலைவாய்ப்புச் செய்திகளில் இருந்து உங்களுக்குத் தேவை யான தகவல்களை எடுத்துக் கொள்ளலாம்.

### ஆர்வத்தையும் திறமைகளையும் ஒப்பிடுதல்.

பல்வேறு தொழில்களைப் பற்றித் தெரிந்த பிறகு, நீங்கள் வளர்க்க வேண்டிய திறமைகளையும், உங்களுடைய சக்திகளையும் பற்றி புரிந்து கொள்ளலாம். உங்களிடமிருக்கும் ஆர்வங்களை உங்களுக்குத் தகுந்த தொழிலைத் தேர்ந்தெடுக்க உங்கள் வீட்டில் ஆராய்ந்து பாருங்கள்.

நீங்கள் முடிவு செய்த தொழிலைப் பற்றி உங்களுடைய ஆசிரியர்களிடம் பேசி, அதற்குத் தகுந்த திறமைகளை வளர்க்கத் தினமும் பயிற்சி செய்யவேண்டும்.

### பயிற்சி

☆ விடுமுறை நாட்களில் உங்களுக்கு ஆர்வமுள்ள தொழில்சார்ந்த இடங்களைத் தேர்ந்தெடுத்து, அங்கு பணிபுரிவதன் மூலம், அனுபவத்தை வளர்க்கலாம்.

☆ அடிப்படை கணினி இயக்கத்தைப் பழகிக் கொள்ளுங்கள்.

☆ தட்டச்சுப் பயிற்சி மிகவும் அவசியம்.

☆ உங்களுக்குப் பிடித்த ஏதாவது ஒரு இசைக் கருவியைப் பயன்படுத்த கற்றுக் கொள்ளுங்கள். இது உங்களுக்குத் தேவையான மன அமைதியையும், உடல் ஆரோக்கியத்தையும் கொடுக்கும்.

போன்றவிடயங்களைப் புதிதாக தொழில் ஆரம்பிக்கவும், தொழிலை மேலும் விருத்தி செய்யவும் உதவுகின்றது.

### திறமைகள் வளர்த்தல்

☆ தொழிலுக்குத் தேவையான திறமைகளை வளர்த்தல் அவசியம்.

☆ நீங்கள் படிப்பது அறிவை வளர்க்கவும், தொழில் கற்கவும், பணம் சேர்க்கவும் என்பதை உணர்ந்து செயற்படவேண்டும்.

☆ நீங்கள் எந்த வேலையில் சேர விரும்புகின்றீர்களோ, அதில் சேர தேவையான அறிவு, திறமைகள் கட்டாயம் தேவை, அது மட்டுமல்லாமல், அதைச் செய்யக் கூடிய உடல் சக்தி மற்றும் மனத்திறன் பெற்று இருக்கவேண்டும்.

☆ இவற்றை நீங்கள் படிக்கும் காலத்திலேயே கற்றுக்கொள்ள வேண்டும். இப்படி செய்வதனால், நீங்கள் படிப்பை முடிக்கும் போது, அந்த வேலை வாய்ப்பை ஏற்கும் சாமர்த்தியமும் உங்களிடம் உருவாகிவிடும்.

☆ நங்கள் கற்க வேண்டிய முக்கிய திறமைகள- பேச்சுத் திறமை, படிக்கும் திறமை, ஆளுமை வளர்ச்சி, வாழ்வை சந்திக்கும் திறன்.

☆ ஆங்கில அறிவு மிகவும் அவசியம், அந்த மொழி குறைபாடு உள்ளவர்கள் - சில வகுப்புக்களுக்குச் செல்லுதல், தினமும் புத்தகங்கள் வாசிப்பது, ஆங்கில செய்தித்தாளை அரைமணி நேரம் வாசிப்பதன் மூலம் ஆங்கில மொழியறிவை வளர்த்துக் கொள்ளலாம். ✷

# பன்னிரு வேங்கைகளின் நினைவு நாள்; புதுக்குடியிருப்பு மாவீரர் மண்டபத்தில்!

(புதுக்குடியிருப்பு)

பன்னிரு வேங்கைகளின் நினைவு நாள் நேற்று முன்தினம் காலை 9 மணிக்கு புதுக்குடியிருப்பு பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் ச.இளஞ்செழியன் தலைமையில் புதுக்குடியிருப்பு மாவீரர் மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பொதுச்சுடரை புதுக்குடியிருப்பு கிருஷ்ணர் கோயில குருக்கள் ஏற்றிவைத்தார்.

இந்த நிகழ்வில் தமிழீழத் தேசியக்கொடியை . முல்லைத்தீவு மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன் ஏற்றிவைத்தார்.

பன்னிரு வேங்கைகளுக்கான ஈகச்சுடர் ஏற்றப்பட்டு, மலர்மாலை அணிவிக்கப்பட்டது. புதுக்குடியிருப்பு பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் இளஞ்செழியன் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன் ஆகியோர் உரை நிகழ்த்தினார். புதுக்குடியிருப்பு வர்த்தக சங்கத் தலைவர், கந்தசுவாமி நன்றியுரையை நிகழ்த்தினார்.

இந்த நிகழ்வில் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், வர்த்தக சங்க ஊழியர்கள் மற்றும் பொது மக்கள், போராளிகள் கலந்து கொண்டனர். (ற)




எழுத்தாளர் தாமரைச் செல்வியின் "பச்சை வயல் கனவு" நூல் வெளியீட்டு விழாவில் - வெளியீட்டுரையை கிளிநொச்சி மாவட்டத்தின் தமிழ்ச் சங்கச் செயலாளர் வே.பரமநாதபிள்ளை நிகழ்த்துவதையும், இராசம்மா சுப்பிரமணியத்திடம் சிறப்புப்பிரதியை ஓய்வு பெற்ற கிராம சேவையாளர் ஆ.மார்க்கண்டு பெற்றுக்கொள்வதையும் காணலாம்.

## கரியாலை நாகபடுவான் குளத்தின் கீழ் நெற்செய்கை செய்வோருக்கான கூட்டம்

கரியாலை நாகபடுவான் குளத்தின்கீழ் காலபோக நெற்செய்கை மேற்கொள்வது தொடர்பான கலந்துரையாடல் கடந்த வெள்ளிக்கிழமை காலை 10.30 மணியளவில் கரியாலை நாகபடுவான் அபிவிருத்தி மண்டபத்தில் பூநகரிப் பிரதேச செயலர் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வின்போது - மங்கள விளக்கை பூநகரி பிரதேச செயலர், பூநகரி பிரதேச பெரும்பாக உத்தியோகத்தர், காணி அலுவலர் ஆகியோர் ஏற்றிவைத்தனர். இந்த நிகழ்வில் தமிழீழ தேசியக் கொடியை முழங்காவில் பிரதேச தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன இணைப்பாளர் றஞ்சன் ஏற்றிவைத்தார்.

நிகழ்வின் சிறப்புரைகளை பூநகரி பிரதேச செயலர், பெரும்பாக உத்தியோகத்தர், நாகபடுவான் கிராமசேவையாளர் ஆகியோர் நிகழ்த்தினர். நன்றியுரையை கமக்கார அமைப்பின் ·செயலாளர் நிகழ்த்தினார்.

இதன்போது எதிர்வரும் 10 ஆம் திகதி தொடக்கம் கால்நடைக் கட்டுப்பாடுகள் அமுல்படுத்தப்படுத்தல், குளத்துநீரின் வீண் விரயம் தவிர்த்தல், விவசாயத்தின் அவசியம் பற்றியும் எடுத்துக் கூறப்பட்டது. இந்த நிகழ்வில் கமக்கார அமைப்புகள் உட்பட அந்தக் குளத்தின்கீழ் பயிர்ச்செய்கை மேற்கொள்ளும் அனைவரும் கலந்துகொண்டனர். (ஸ்ரீ)




## உணவு விவசாய நிறுவனத்தினால் விவசாயிகளுக்கு உள்ளீடுகள்!

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் அனுசரணையுடன் உணவு விவசாய நிறுவனத்தின் உணவு உற்பத்தி திட்டத்தின் கீழ் கடந்த திங்கட்கிழமை காலை 10.30 மணியளவில் விவசாயிகளுக்கு உள்ளீடுகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் ஜெயந்தி நகர் கிராம விவசாய பயனாளிகளுக்கு விவசாய உள்ளீடுகள் வழங்கப்பட்டன. இதன்போது 40 பயனாளிகளுக்கு ஒரு ஏக்கர் நெற்செய்கைக்கு விதை நெல்லும், இரசாயன உரங்களுமாக மொத்தம் ரூபா 3540 பெறுமதியான உள்ளீடுகளும் 176 பயனாளிகளுக்கு அரை ஏக்கர் சிறுதானியச் செய்கைக்கு கௌபி, உழுந்து, இரசாயன உரங்களுமாக மொத்தம் ரூபா 2750 பெறுமதியான உள்ளீடுகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வு கிளிநொச்சி மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் பிரதேசப் பொறுப்பாளர் இ.மங்களேஸ், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு இணைப்பாளர் சிவநேசன், உணவு விவசாய நிறுவன இணைப்பாளர் மா.செல்வராசா அந்தப் பகுதி விவசாய அமைப்புப் பிரதிநிதிகள், விவசாயிகள் உட்படப் பலரும் கலந்து கொண்டனர். (ஸ்ரீ)

## மன்னார் விடத்தற்தீவு பிரதேசம் அடிப்படை வசதிகளற்ற நிலையில்

1990 ஆம் ஆண்டுக்கு முன்னர் வளம்செறிந்த பிரதேசமாக காணப்பட்ட மன்னார் விடத்தற்தீவு பிரதேசம் தற்போது கடந்த காலப் போர் வடுக்களை சுமந்து செழிப்பற்று காட்சியளிக்கிறது.

இந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள், 1990 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இடம்பெற்ற இராணுவத்தினரின் போர் நடவடிக்கை காரணமாக சொந்த பந்தங்களையும், சொத்துக்களையும் விட்டு பலர் இந்தியாவுக்குச் சென்றனர். தற்போது ஏற்பட்டுள்ள சமாதானச் சூழ்நிலை காரணமாக அவர்கள் மீளக்குடியமர்ந்து வருகின்றனர். அவர்களது வீடுகள் எறிகணை வீச்சுக்களால் தரைமட்டமாகியிருக்கின்றன.

இதன் காரணமாக அவர்கள் பெரும் பிரச்சினைகளை எதிர்நோக்குவதுடன், அடிப்படை வசதிகளான குடிநீர் வசதியின்மை, போக்குவரத்து வசதியின்மை போன்ற பல காரணங்களால் சொல்லொணாத் துன்பங்கங்களை அனுபவித்து வருகின்றனர்.

## 2 கிலோ போதைப்பொருள் மன்னார் பொலிஸாரால் மீட்பு

(மன்னார்)

தலைமன்னார் பகுதியில் 60 லட்சம் ரூபா பெறுமதியுடைய 2 கிலோ நிறையுடைய ஹெரோயின் போதைப்பொருள் பொதி செய்யப்பட்ட நிலையில் வீதியோரத்தில் கிடந்த போது மன்னார் பொலிஸாரால் மீட்கப்பட்டது.

கடந்த சனிக்கிழமை மாலை தலைமன்னார் வீதியில் ஓலைத்தொடுவாய்க்கும், கரிசல் சந்திக்கும் இடையில் கிடந்த இந்த ஹெரோயின் பொதி, மன்னார் பொலிஸாரால் மீட்கப்பட்டதாக பொலிஸ் தலைமையகப் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவின் பணிப்பாளர் தெரிவித்தார்.

மீட்கப்பட்ட இந்த ஹெரோயின் பொதிக்கும், கடந்த வியாழக்கிழமை இப்பகுதியில் கெனத்தலர் பகுதியில் இடம்பெற்ற கொலைக்கும் தொடர்பிருக்கலாம் எனச் சந்தேகமிருப்பதாகப் பொலிஸ் அதிகாரி பூஜித தெரிவித்தார்.

## மன்னார் செம்மண்வீதிக் கிராமத்தில் பாதிக்கப்பட்டோருக்கு 76 வீடுகள் கையளிப்பு

கடந்தகால யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட செம்மண் வீதிக் கிராமத்தில் நிகொட் செயற்றிட்டத்தில் அமைக்கப்பட்ட 76 வீடுகள் பொதுமக்களிடம் வைபவரீதியாகக் கையளிக்கப்பட்டன.

மன்னார் அரச அதிபர் வி.விஸ்வலிங்கம் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் நிகொட் நிறுவனப் பணிப்பாளர் லங்கா நேசன், மன்னார் மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இனியவன் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

ஒவ்வொரு வீடுகளும் ஒரு லட்சத்துப் பத்தாயிரம் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ளன. (201)

**கண்ணகைபுரம்**

## அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை இன்னமும் தற்காலிக கொட்டகையில்

(கிளிநொச்சி)

கண்ணகைபுரம் கிராமத்தில் அமைந்துள்ள கண்ணகைபுரம் அரசினர்தமிழ்கலவன் பாடசாலை தற்காலிக கொட்டகையில் இயங்கி வருகின்றது.

இந்தப் பாடசாலை இயங்கி வரும் இரண்டு கொட்டகைகளும் தற்காலிக அமைக்கப்பட்டவையாகும். இதில் ஒன்று கிடுகினாலும், மற்றையது ஓட்டினாலும் வேயப்பட்டிருக்கிறது. மழை காலத்தில் மழைநீர் வகுப்பறையை நனைப்பதால் மாணவர்களின் கல்வியை பெரிதும் பாதிக்கின்றது.

இந்தப்பாடசாலைக்கான விளையாட்டு மைதானம் இல்லை. தரம் 11 வரையான வகுப்புக்கள் உள்ள இப்பாடசாலையில் 135 மாணவர்கள் கல்வி கற்கின்றனர். ஆசிரியர்கள் 9 பேர் கல்வி கற்பிக்கின்றனர். இவர்களில் 2 பேர் தொண்டராசிரியர் ஆவார். இங்கு மாணவர்களின் தொகை வரவரக் குறைவடைந்து வருகின்றது. இங்கு அடிப்படை வசதிகளற்ற நிலை காணப்படுவதாலேயே இந்தநிலை தோன்றியுள்ளது.

மேலும் இந்தப் பாடசாலைக்குரிய வசதிகள் செய்து கொடுக்கப்படாவிட்டால் மாணவர்களின் கல்வி நிலை மேலும் பாதிப்படைய வாய்புகள் இருப்பதாக இப்பகுதி மக்கள் தெரிவித்தனர். (ஸ்ரீ)

## பாண்டியன் குளம் மாதர் சங்கத்தின் முதலாம் ஆண்டு நிறைவு விழா நிகழ்வு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு பாண்டியன் குளம் இளநிலா மாதர் சங்கத்தின் முதலாம் ஆண்டு நிறைவுவிழா நிகழவு கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பாண்டியன் குளம் பிரதேசசபை மண்டபத்தில் மாதர் சங்கச் செயலாளர் சரஸ்வதி தலைமையில் இடம்பெற்றது.

பொதுச்சுடரை கோட்ட தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் பூரணம் சற்குணலிங்கம் ஏற்றினார்.

தமிழீழ தேசியக் கொடியை பாண்டியன் குளம் வலயப் பொறுப்பாளர் சுடர்க்குமரன் ஏற்றி வைத்தார்.

இந்த நிகழ்வில் தொடர்ந்து வரவேற்புரையை குணசேகரம் குணசீலா நிகழ்த்தினார். சிறப்புரையை வலயப்பொறுப்பாளர் சுடர்க குமரன், தேசிய எழுச்சிபேரவை உப செயலாளர் பரமானந்தம் ஆகியோர் நிகழ்த்தினர். அத்துடன் இளநிலா கலை மன்றத்தின் கலை நிகழ்வுகள் இடம்பெற்றன.

## சின்னஞ்சிறு செய்திகள்

### பனம் கைப்பணிப் பொருட்களுக்கு வரவேற்பு

வட்டக்கச்சி பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் அண்மையில் நடத்தப்பட்ட பனம்பொருள் கைப்பணிக் கண்காட்சிப் போட்டியின் இறுதிநாள் நிகழ்வில் - அதனை விற்பனை செய்ததில் 26 ஆயிரம் ரூபாவுக்கு மேல் வருமானம் பெறப்பட்டது. பனம் கைப்பணிப் பொருட்களுக்கு நல்ல வரவேற்பிருப்பதும், உற்பத்தியாளர்களுக்கு நல்ல வருமானமும் கிடைக்கும் என்பது இதன் மூலம் தெரிய வந்துள்ளது. ஆகவே, இந்த உற்பத்தியின் உற்பத்தி செய்து நல்ல வருமானத்தை ஈட்டிக்கொள்ள வாய்ப்பு உள்ளது என கிளிநொச்சி மாவட்ட பனை அபிவிருத்திச்சபை இணைபபாளர் கே.மாணிக்கம் தெரிவித்தார்.

### கலந்துரையாடல்

கிளிநொச்சிமாவட்டத்தைச் சேர்ந்த பல்கலைக்கழக புகுமுக மாணவர்களுக்கான கலந்துரையாடல் இன்று காலை 10 மணிக்கு இடம்பெறும். 2004 ஆம் ஆண்டு பல்கலைக் கழகங்களுக்குத் தெரிவான கணித, விஞ்ஞானப் பிரிவு மாணவர்களுக்கான கலந்துரையாடல் கிளிநொச்சி பல்கலைக்கழக புகுமுக மாணவர் ஒன்றிய மண்டபத்தில் இடம்பெறும்.

### வலுவிழந்தோருக்கு உதவிகள் இல்லை

பாண்டியன்குளம், துணுக்காய்ப் பகுதியில் நூற்றுக்கு மேற்பட்ட வலுவிழந்தோர் வாழ்ந்துவருகின்றனர். இவர்களுக்கு எந்தவொரு அமைப்புக்களும் உதவிசெய்ய முன்வரவில்லை என தெரிவிக்கப் படுகிறது.

கடந்த காலங்களில் இடம் பெற்ற யுத்தத்தினால் தமது உடல் உறுப்புக்களை இழந்தவர்களின் நலன் பேணுவதற்கு எந்தவொரு அமைப்பும் இந்தப் பகுதியில் இல்லை. அத்துடன் இவர்களுக்கு உதவிபுரிவதற்கு நிறுவனங்கள், அமைப்புக்கள் முன்வரவில்லை எனவும், இந்தப் பிரதேசத்தில் வாழும் வலுவிழந்தோர் கவலை தெரிவித்தனர்.

### பொலிஸாரினால் தீவிர சோதனை

வவுனியா - மன்னார் வீதியில் பொலிஸார் தீவிர பரிசோதனையில் ஈடுபட்டு வருகின்றனர்.

மன்னாரில் இருந்து தென்னிலங்கைக்கு அதிகளவு போதைப் பொருட்கள் கடத்தப்படுவதாகத் தெரிவிக்கப்படுவதை அடுத்து, இதனைத் தடுப்பதற்காகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த நடவடிக்கையைத் தொடர்ந்து இரவு வேளைகளில் மன்னார் வீதிகளில் செல்லும் வாகனங்கள் அனைத்தும் தீவிர சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன.

### மறைக்கல்வி மாணவர் கண்காட்சி

வட்டக்கச்சி கட்சன் வீதி ஆலயத்தில் பங்கு மறைக்கல்வி நிறுவன தினத்தை முன்னிட்டு கடந்த 26 ஆம் திகதி தொடக்கம் 3 ஆம் திகதிவரை பங்குப்பிள்ளைகளுக்கான பாடநெறிகள், விளையாட்டு, கண்காட்சி என்பன நடைபெற்று வருகின்றன.

இந்த நிகழ்வை யாழ். மறை மாவட்ட மறைக்கல்வி இயக்குநர் ஜே.ஜே.மௌதிஸ், அவரது குழுவினரும் இணைந்து நிகழ்த்தினர். இந்த நிகழ்வில் வட்டக்கச்சி பங்கு மாணவர்கள் கலந்து கொண்டனர்.

இராமநாதபுரம் ஆரோக்கிய நாதர் ஆலயத்தில் காலை மறைக் கல்வி திருப்பலியும், இரவு 7 மணிக்கு கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (9)

### அடிப்படை வசதியற்ற பாலியாற்று மக்கள்

(மன்னார்)

மன்னார் - பாலியாற்றுப் பகுதி மக்கள் அடிப்படை வசதிகளற்ற நிலையில் மிக நீண்ட காலமாக வாழ்ந்து வருகின்றார்கள்.

இந்தப் பிரதேசத்தில் எழுபத்தைந்துக்கும் மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த மக்கள் வாழ்ந்து வருகின்றார்கள். இவர்களுக்கான நிரந்த வீடுகளோ, மருத்துவ மனையோ இன்றி பெரும் சிரமங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருகிறார்கள்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*சொலல் வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை*
*இகல்வெல்லல் யார்க்கும் அரிது*

திருக்குறள்

# நமது நோக்கு

## சமாதானத்தில் உறுதியாக இருக்கும் புலிகளும் வெறுமனே வாய்ப்பந்தல் போடும் அரசாங்கமும்!

சமாதான முன்னெடுப்புக்களைத் தொடர்வதில் தாம் கொண்டுள்ள பற்றுறுதியை விடுதலைப் புலிகள் மீண்டும் ஒருதடவை மிகத் தெளிவாகவும் வெளிப்படையாகவும் உறுதிசெய்துள்ளனர் என்றே கூறவேண்டும்.

இரு வாரங்களின் முன்னர் ஐக்கிய நாடுகள் சபையில் உரையாற்றிய ஜனாதிபதி - தான் சமாதானத்தை பேச்சு வார்த்தைமூலம் கொண்டுவருவதற்கு கடுமையான முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகவும், இந்த விடயத்தில் விடுதலைப் புலிகள் விட்டுக்கொடுப்புடன் இணைந்து செயற்படவேண்டும் என்றும், அதற்கு சர்வதேச நாடுகள் அவர்களுக்கு அழுத்தத்தைக் கொடுக்கவேண்டும் எனவும் பேசி, தான் அமைதி முயற்சியில் பரந்த மனத்துடன் ஈடுபடுவதாகப் பிரசாரம் செய்து கொண்டார்.

அவரது அந்த உரை - விடுதலைப் புலிகள் நிறைவேற்றமுடியாத நிபந்தனைகளை விதிக்கிறார்கள் என்றும், இதன்காரணமாகவே பேச்சுவார்த்தை முயற்சிகளில் இழுபறிநிலை ஏற்பட்டுள்ளதாகவும் சர்வதேச சமூகத்திற்கு உணர்த்தும் நோக்குடன் கூடியஒன்று என்றே கூறவேண்டும்.

ஜனாதிபதியின் இந்தப் பொய்ப்பிரசார உரைகளுக்கு பதில் விளக்கம் அளிக்கவேண்டிய பொறுப்பு விடுதலைப் புலிகளுக்கு இருந்தபோதிலும், அதனை இலங்கையில் இருந்து வெறும் அறிக்கைகள் மூலம் வெளிப்படுத்துவதை விடவும் சர்வதேச அரங்கில் நின்றுகொண்டு உலக சமூகத்திற்கு தெளிவுபடுத்துவதே உத்தமமானது என அவர்கள் நினைத்திருக்கவேண்டும்.

அதனால் இம்முறை தங்களின் ஐரோப்பிய விஜயத்தின் போது சமாதானம் தொடர்பான தமது நிலைப்பாட்டை தெட்டத்தெளிவாக வெளிப்படுத்தியுள்ளமையானது பொருத்தமான - அவசியமான ஒன்று என்றே கூறவேண்டும்.

தாம் சமாதானத்தை குழப்பும் எந்தவொரு நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை என்றும், இலங்கை அரசாங்கமே பேச்சுவார்த்தைகளை மீளவும் ஆரம்பிக்க பொருத்தமானதும் அவசியமானதுமான தளத்தையும் சூழலையும் உருவாக்கப் பின்னடித்து வருவதாகவும் இதன்காரணமாகவே சமாதானமுயற்சிகளில் தேக்கநிலை உருவாகியுள்ளதாகவும், விடுதலைப் புலிகள் ஜெனிவாவில் வைத்துத் தெரிவித்துள்ளார்கள்.

இதுதான் சரியான நிலை வெளிப்பாடாகவும் உள்ளது. ஜனாதிபதியும் அரசும் சமாதானம் தொடர்பாகப் பேசினாலும், அறிக்கைகளை விடுத்தாலும் அவை வெறும் பேச்சுக்களாகவும் அர்த்தமற்றதும் எந்தவித ஆக்கபூர்வமான செயற்பாடுகளுக்கும் வழிவகுக்காத வரட்டு வார்த்தைகளாகவுமே தொடர்ந்தும் இருந்து வருகின்றன.

அரசினதும் ஜனாதிபதியினதும் சமாதான முயற்சிகள் எதுவும் இதுவரை நம்பிக்கைதரும் வகையில் நகர்வுகள் எதனையும் மேற்கொள்ளவில்லை என்றே கூறவேண்டும்.

ஐக்கியமக்கள் சுதந்திரமுன்னணி ஆட்சியமைத்து ஐந்து மாதங்களாகும் நிலையில், முன்னணியின் பங்காளிக் கட்சிகளிடையே சமாதானம் தொடர்பாக ஒருமித்த நேர்மையான கருத்துநிலைப்பாடு இன்னமும் உருவாகவில்லை. அதனை உருவாக்க ஜனாதிபதியாலும் முடியவில்லை. ஐக்கிய மக்கள் சுதந்திரமுன்னணியின் உருவாக்கம் என்பது சமாதானமுயற்சிகளுக்கு எதிரான கொள்கைகளின் அடிப்படையிலேயே நேர்ந்தது என்பதை இந்தச் சூழலில் நினைவுபடுத்தவேண்டியது அவசியமாகும்.

ஆகவே ஐ.ம.சு. முன்னணிக் கட்சிகளுக்கிடையே சமாதானப்பேச்சுக்கள் குறித்து ஒரு பொதுநிலைப்பாட்டை ஏற்படுத்தாத வரை ஜனாதிபதியால் அமைதிப் பேச்சுக்கள் எதனையும் முன்னெடுக்கமுடியாது. ஜனாதிபதி எவ்வளவுதான் தன்னை சமாதான விரும்பியாக பிரசாரம் செய்தாலும், தனது பங்காளிகளை சமாளித்து அவர்களை வாயடைக்கச் செய்து மௌனம் காக்கவைக்காமல் பேச்சுவார்த்தைத் தளத்தில் ஓரடிகூட நகர முடியாத நிலையே தொடரப்போகிறது.

ஆனால் விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை எப்போதோ... அதாவது ஐ.தே.முன்னணியரசுடனான பேச்சுவார்த்தை காலகட்டத்திலேயே சமாதான முயற்சிகளில் தமது பங்கு மற்றும் நிலைப்பாடு குறித்து ஒரு தீர்க்கமான முடிவிற்கு வந்துவிட்டிருந்தார்கள். அதில் இன்றுவரை உறுதியாக நின்றும் வருகின்றார்கள். இதுவே இன்று அரசுக்கும் ஜனாதிபதிக்கும் தலையிடியை தரும் விடயமுமாகும்.

இதுவரைகாலமும் புலிகள் எதனைச் சொன்னார்களோ அதையே ஜெனீவாவில் வைத்து மீண்டும் உறுதிசெய்துள்ளனர். இதனால்தான் நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன், சமாதான முன்னெடுப்புகள் இல்லாத சூழலிலும் விடுதலைப் புலிகள் அது தொடர்பாக மேற்கொள்ளும் நடவடிக்கைகள் நிறைவளிப்பதாக உள்ளது என்று பாராட்ட நேர்ந்துள்ளது.

எனினும் ஜனாதிபதி இவ்விடயத்தில் வரட்டுத்தனமானதும் பொய்யானதுமான அறிக்கை விடுதல்களை நிறுத்தி ஆக்கபூர்வமாக எதனையாவது செய்யாதவிடுத்து சமாதானமுயற்சிகள் ஒருகை ஓசையாக போய்விடும் அபாயம் உள்ளது என்பதை சர்வதேச சமூகம் புரிந்து கொள்வது இன்றைய காலகட்டத்தின் அவசியமாக உள்ளது.

## நாடும் நடப்பும்




### சச்சு மாஸ்ரர் கொலை

# சந்தேக நபரை நீதிமன்றில் ஆஜர்படுத்துவதில் தாமதம்

மட்டக்களப்பு சிறைச்சாலையில் கருணா குழுவைச் சேர்ந்த சச்சுமாஸ்ரர் உட்பட இருவர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபரான, சிறைக்கைதி மகேந்திரன் புவிதரன் நேற்று முன்தினம் 4 ஆவது தடவையாகவும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவில்லை.

கடந்த ஜுலை மாதம் 15 ஆம் திகதி மட்டக்களப்பு சிறைச்சாலையில் விளக்கமறியல் கைதிகளான கருணா குழுவைச் சேர்ந்த சச்சுமாஸ்ரர் எனப்படும், கணபதிப்பிள்ளை மகேந்திரன் மற்றும் தீபன் எனப்படும் சரவணமுத்து சாந்தகுமார் ஆகியோர் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

இந்தக் கொலை தொடர்பாக சிறைக்கைதியான மகேந்திரன் புவிதரன் என்பவரும், அதற்கு உடந்தையாக இருந்தார் என்ற சந்தேகத்தின் பேரில் - சிறைக்காவலரான தம்பிராசா அருளம்பலம் என்பவரும் கைதாகி, தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

பாதுகாப்பின் நிமிர்த்தம் பதுளை சிறைச்சாலையில் வைக்கப்பட்டுள்ள முதலாவது சந்தேகநபரான மகேந்திரன் புவிதரன் நேற்று முன்தினம் 4 ஆவது தடவையாகவும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவில்லை.

இவரை அங்கிருந்து அழைத்து வருவதில் பாதுகாப்பு தொடர்பான பிரச்சினைகள் இருப்பதாக மட்டக்களப்பு சிறைச்சாலை அத்தியட்சகர் நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பித்தார்.

மட்டக்களப்பு சிறைச்சாலையில் வைக்கப்பட்டுள்ள இரண்டாவது சந்தேக நபர் மட்டும் ஆஜர்படுத்தப்பட்டார். இதனையடுத்து குறிப்பிட்ட இரண்டு சந்தேகநபர்கள் மீதான விளக்கமறியலை நீதிவான் நீதிமன்ற நீதிபதி எம்.எச். எம்.அஜ்மீர் எதிர்வரும் 19 ஆம் திகதிவரை நீடித்தார்.

அதேவேளை, கடந்தவருடம் ஜுலை மாதம் 14 ஆம் திகதி மட்டக்களப்பு கல்லடி பாலத்தில் ஆயுதங்களுடன் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள 4 பெண்கள் உட்பட 8 விடுதலைப் புலிப்போராளிகளின் விளக்க மறியலும எதிர்வரும் 19 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

### படுகொலைகள் குற்றச்சாட்டுக்களைத் தடுக்க

# நாடாளுமன்ற தெரிவுக் குழுவொன்றை அமைப்பதற்கு அரசாங்கம் யோசனை

நாட்டில் இடம்பெறும் படுகொலைகளையும், குற்றச்செயல்களையும் தடுப்பதற்கு, உரியநடவடிக்கை எடுப்பதற்காக நாடாளுமன்ற விசேட தெரிவுக்குழுவொன்றை அமைப்பதற்கு அரசாங்கம் உத்தேசித்துள்ளது.

குற்றச் செயல்களைத் தடுப்பதற்காக நீண்டகால, குறுங்கால செயற்திட்டங்களை அறிமுகம்செய்து நடைமுறைப் படுத்தவும், அதற்காக புதிய சட்டங்களை அறிமுகம் செய்யவோ, சட்டத்திருத்தங்களை மேற்கொள்ளவேண்டிய தேவையோ எழுந்துள்ளதா என்பதை ஆராயவும் இந்தக்குழு உரிய நடவடிக்கை எடுக்கும்.

நாடாளுமன்ற சபை முதல்வர் அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவின் பிரேரணைக்கு அமைய அரசாங்கத்தின் இந்த ஆலோசனை நேற்று முன்தினம் இடம்பெற்ற நாடாளுமன்ற அமர்வின் ஒழுங்குப்பத்திரத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

குற்றச்செயல்கள் அதிகரிப்புக்கு ஏதுவான காரணங்களைக் கண்டறியும் இந்தக்குழு, குற்றச்செயல்கள் அதிகரித்துச் சென்றமைக்கு பொலிஸாரினதும், ஏனைய சம்பந்தப்பட்ட அதிகாரிகளினதும் உதாசீனம், கவனயீனம் என்பன காரணமா அல்லது தற்போது பின்பற்றப்படுகின்ற நீதிமன்ற முறைகளில் குறைபாடுகள் உள்ளனவா என்பதையும் கண்டறியும்.

இதேவேளை, இந்த நாடாளுமன்ற விசேட தெரிவுக்குழு மேற்கொள்ளும் விசாரணைகளுக்கு அமைய எவரையும் குழுவின் முன் சாட்சியமளிக்க அழைக்கும் அதிகாரம் இந்தக் குழுவுக்கு உண்டு. இடைக்கால அறிக்கைகளைச் சமர்ப்பிக்கவும் நாடாளுமன்றம் ஒத்திவைக்கப்படினும் குழு தனது கூட்டத்தை நடத்திச் செல்லும் அதிகாரமுடையதாக இருக்கும்.

கடந்த சில வருடங்களாக நாட்டின் பல்வேறு பகுதிகளிலும மனிதப் படுகொலைகள் உட்பட, பாரிய குற்றச்செயல்கள் அதிகரித்துச் செல்வதால் உரிய மாற்று நடவடிக்கைகளை மேற்கொண்டு - அவற்றைத் தடுப்பதற்கே அரசாங்கம் இந்த நாடாளுமன்ற விசேட தெரிவுக்குழுவை நியமிக்க உத்தேசித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# புலிகளுக்கு எதிராக துண்டுப்பிரசுரம் சந்திரசேகரன் எம்.பி.கண்டனம்



இந்திய மீனவர்களைக் கைதுசெய்த இராணுவம், இந்திய மீனவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளிடம் சிக்கினால் கொல்லப்படுவார்கள் என துண்டுப்பிரசுரம் விநியோகித்திருப்பதை வன்மையாகக் கண்டிப்பதாக மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பெ.சந்திரசேகரன் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் இரவு மன்னார் தெற்குப் பேசாலைக் கடற்பரப்பில் தொழிலுக்காக வந்த இந்திய மீனவர்களை இராணுவம் கைதுசெய்தபோது, மேற்படி துண்டுப் பிரசுரம் விநியோகிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளுக்கும், இந்திய அரசுக்கும் இடையில் முறுகல் நிலையை ஏற்படுத்துவதற்கு அரசும், அதன் இராணுவமும் சேர்ந்து செய்கின்ற பாரிய சதிமுயற்சி இதுவாகும்.

ஒருபக்கம் சர்வதேச நாடுகளுக்கு தம்மை சமாதான விரும்பிகளாகக் காட்டிக்கொள்கின்ற அரசு மறுபக்கம் எல்லா விதத்திலும் தமிழீழ விடுதலைப் புலிகளை பலவீனப்படுத்துவதிலே தனது நோக்கமாகக் கொண்டு செயற்படுகின்றது. கருணா விவகாரமும் இதற்கு ஓர் உதாரணம் ஆகும்.

இத்தகைய முயற்சிகளினால் தமிழீழ விடுதலைப் புலிகளின், தமிழர்களின் அரசியல் சக்தியை சிதறடிக்கும் முயற்சியில் அரசை வெற்றிபெற தமிழ் மக்கள் வாய்ப்பளிக்க மாட்டார்கள் எனவும், நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரசேகரன் மேலும் தெரிவித்தார்.

# வகுப்புக்களுக்கு செல்லும் மாணவிகளுடன் சேஷ்டை புரியும் இளைஞர் குழுவினர்!

நல்லூர் சட்டநாதர் கோவிலை அண்டிய பகுதியில் இளைஞர் குழுவொன்று அந்தப் பகுதியில் உள்ள மக்களுக்கு இடையூறு விளைவித்து வருகின்றனர்.

நல்லூர் சட்டநாதர் சிவன்கோயிலுக்கு அருகாமையில் உள்ள திவ்விய ஜீவன சங்கத்தின் முன்பாகவுள்ள அந்த மைதானத்தில் நிற்கும் இந்த இளைஞர்கள் இந்தப் பகுதியில் போவோர் மீது சேஷ்டை புரிந்து வருகின்றனர்.

மாலை வேளைகளில் திவ்யஜீவன மண்டபத்துக்கு நடன வகுப்புகளுக்கும், யோகாசன வகுப்புகளுக்கும் வருகின்ற பெண்கள் மீது இவர்கள் சேஷ்டை புரிவதாகவும் அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இந்த இளைஞர்கள் பொலிஸாரினால் இருமுறை கைது செய்யப்பட்டும், இன்னும் அவர்களது அட்டகாசம் குறைந்த பாடில்லை என்றும் மாலை வேளைகளில் மதுபானங்களை வாங்கி அந்தப் பகுதியில் வைத்து அவர்கள் அருந்துவதாகவும் அந்தப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

அந்த இளைஞர்கள் அனைவரும் யாழ்.மாவட்டத்தில் உள்ள பிரபல பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்கள் என்பதுதான் வேதனைக்குரிய விடயம் என அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்தனர்.

# வடமராட்சி கிழக்குப் பிரதேச அபிவிருத்திக்கு வீதிகளின் புனரமைப்பு மிகவும் அவசியமாகும்:::

- அஸ்மிதா

வடமராட்சி கிழக்குப் பிரதேசம் தொடர்ந்தும் பின்தங்கிய பிரதேசமாக இருந்து வருவதற்கு அந்தப் பிரதேசத்தில் காணப்படும் வீதிகள் நீண்ட காலமாக புனரமைக்கப்படாமல் இருப்பதே பிரதான காரணமாகும்.

யாழ். மாவட்டத்தில் ஒரு பகுதியாக வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவு திகழ்கின்ற போதும், இந்தப் பிரதேசத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகள் யாவும் மந்த கதியிலேயே செல்வதைக் காணக் கூடியதாக உள்ளது.

இரண்டாம் கட்ட ஈழப்போர் தொடங்குவதற்கு முன்னரே இந்தப் பிரதேசத்தில் காணப்படும் பிரதான வீதிகள் மிகவும் மோசமான நிலையில் புனரமைக்கப்படாமல் இருந்ததாக அறியக்கூடியதாகவுள்ளது.

இந்தப் பிரதேசத்தின் வீதிகள் புனரமைப்புச் செய்யப்படாமல் குன்றும் குழியுமாக காணப்படுவதன் காரணமாக இந்தப் பிரதேசத்திற்கான போக்குவரத்து வசதிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

மணற்காடு தொடக்கம் சுண்டிக்குளம் வரையிலான 32 மைல் நீளமுள்ள இந்தப் பிரதேசத்தில் நாகர் கோவில் இராணுவ முகாம் அமைந்திருப்பதன் காரணமாக இரண்டு பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

இதில் மணற்காடு, அம்பன், குடத்தனை, பொற்பதி, குடத்தனை வடக்கு, ஆகிய கிராம அலுவலர்கள் பிரிவுகள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் அமைந்துள்ளன. இந்தப் பிரதேசங்களில் உள்ள வீதிகள் மிகவும் மோசமான நிலையில் காணப்படுகின்றன.

ஆனால் போக்குவரத்து வசதிகள் ஓரளவு சீராக அமைந்துள்ளதைக் காணக்கூடியதாகவுள்ளது. ஏனைய போரால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் தான் வீதிகள் மோசமான நிலையில் உள்ளன. போக்குவரத்து வசதிகளும் போதுமானதாக இல்லை என அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

வீதிகள் புனரமைக்கப்படாமல் குன்றும் குழியுமாக இருப்பதன் காரணமாக இந்தப் பகுதியில் போக்குவரத்தில் ஈடுபடும் வாகனங்கள் கூடியளவு பணத்தை வசூலிக்க வேண்டியதாகவும் அவர்கள் நியாயம் கற்பிப்பதை தட்டிக்கழிக்கவும் முடியாதுள்ளது.

1991ஆம் ஆண்டு காலப்பகுதக்கு முன்னர் பருத்தித்துறை யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய இடங்களில் இருந்து இரண்டு மணித்தியாலத்திற்கு ஒரு பஸ் சேவை நடைபெற்று வந்தது. ஆனால் அப்படிப்பட்ட ஒரு நிலைமை எப்போது வரும் என மக்கள் அவாவுடன் உள்ளனர்.

தற்போது பருத்தித்துறையில் இருந்து இரு சேவைகள் தினசரி நடைபெற்று வருகின்றன. அந்தச் சேவையும் மருதங்கேணியுடன் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

காலை 7.45 மணிக்கு பருத்தித்துறையில் இருந்து புறப்படும் பேருந்து சுமார் 10.30 மணி அளவிலேயே அதில் செல்லும் பயணிகள் மருதங்கேணிக்கு அப்பால் உள்ள கிராமங்களுக்கு உடனடியாக செல்ல முடியாதுள்ளது. பல மணித்தியாலங்கள் தங்கி நிற்க வேண்டிய ஒரு நிலைமை அந்தப் பயணிகளுக்கு ஏற்படுகின்றது.

மருதங்கேணிப் பிரதேசத்தில் மீள ஆரம்பிக்கப்பட்ட பல பாடசாலைகளில் வடமராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த பல ஆசிரியர்கள் கடமை புரிந்து வருகின்றனர். திங்கள் காலை பருத்தித்துறையிலிருந்து புறப்படும் இவர்கள் நண்பகல் அளவிலேயே கட்டைக்காடு, கேவில் போன்ற பாடசாலைகளைச் சென்றடையக் கூடியதாக உள்ளது.

இவ்விதமான கஷ்ட நிலையைப் யில் போக்குவதற்கு மருதங்கேணியிலிருந்து பஸ் சேவைகள் நடாத்தப்பட வேண்டியது அவசியமானதாகும்.

ஒரு பிரதேசத்தின் ஒட்டு மொத்தமான அபிவிருத்தி அந்தப் பிரதேசத்தின் வீதிப் போக்கு வரத்துடன் பின்னிப்பிணைந்துள்ளது. இந்தப பிரதேசத்தை அபிவிருத்தி செய்ய வேண்டுமானால் முதலில் முன்னுரிமை கொடுத்து இந்தப் பிரதேசத்தின் பிரதான வீதிகளையாவது புனரமைப்புச் செய்ய வேண்டியது அவசியமானதாகும்.

மீள்குடியேற்றம் நடைபெற்ற இந்தப் பிரதேசத்தில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. போக்குவரதது வசதி அசௌகரியம் காரணமாக திட்டங்களை குறிப்பிட்ட காலங்களில் செய்து முடிக்க முடியாமல் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இது ஒரு நீண்ட பிரதேசமாகையால் பல வீதிகள் காணப்படுகின்றன. இந்த வீதிப் புனரமைப்புப் பணிகள் வீதி அபிவிருத்தி பிரதேச சபை என்பவற்றுடன் தொடர்புபட்டதாக உள்ளது.

பிரதான வீதிகள் வீதி அபிவிருத்தி அதிகாரசபையிடமும் வீதி அபிவிருத்தி திணைக்களத்தினதும் பொறுப்பிலேயே உள்ளன.

புனரமைப்புச் செய்யவேண்டிய வீதிகள் பின்வருமாறு:

வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கீழ் உள்ள குடத்தனை - அம்பன் பிரதான வீதி 3 கி.மீற்றர்., மருதங்கேணி - குடாரப்பு பிரதான வீதி 10 கி.மீற்றர்.

வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் கீழ் உள்ள மருதங்கேணி - வெற்றிலைக்கேணி வீதி 10 கி. மீற்றர், மணற்காடு வீதி 2 கி.மீற்றர்., வரணி - குடத்தனை வீதி, மாமுனை - கட்டைக்காடு - சுணடிக்குளம் கடற்கரை வீதி, மாமுனை - குடாரப்புவீதி.

பிரதேசசபையின் கீழ் உள்ள (கல்லு வேலை) குடத்தனை - பொற்பதி வீதி, குடாரப்பு கடற்கரை வீதி, செம்பியன்பற்று - மாமுனை வீதி, செம்பியன்பற்று வடக்கு வீதி, வடலியடி பிள்ளையார் வீதி, உடுத்துறை மகாவித்தியாலய வீதி, சுமைதாங்கி வீதி, கொடுக்கிளாய் வீதி, ஆழியவளை பாடசாலை வீதி, வெற்றிலைக்கேணி - மருதடி வீதி, மண்டலாய் வீதி, நித்திய வெட்டை வீதி, அம்பன் பிள்ளையார் கோயில் வீதிகளில் ஊரியினால் செய்யப்பட வேண்டிய வீதிகள், அம்பன் பிள்ளையார் கோயில் கிழக்கு வீதி, அம்பன் குடியேற்றத் திட்ட மயான வீதி, குடாரப்பு ஊரெல்லை வீதி, செம்பியன் பற்று - தனிப்பனை வீதி, செம் பியன்பற்று மாவடிப் பிள்ளையார் வீதி, மருதங்கேணி ஊரெல்லை வீதி, அரசடி வீதி, வெற்றிலைக் கேணி புல்லாவெளி வீதி, நித்திய வெட்டை கோயில் வீதி, வாரிவட்டம் வீதி, மருதங்கேணி வடக்கு வீதி, தாளையடி மேற்கு குடியேற்றத்திட்ட வீதி, தாளையடி கிழக்கு குடியேற்றத் திட்ட வீதி, ஆழியவளை குடியேற்றத்திட்ட வீதி எனப்பிரதேச சபையினால் பல புதிய வீதிகள் அமைக்கப்படவேண்டியுள்ளன.

மணற்காடு - பொற்பதி வீதி, பொற்பதி குடியேற்றத்திட்ட வீதி, வாரிவட்டம் மேற்கு வீதி, கோயில் வண்ணாங்குளம் வீதி, வெற்றிலைக் கேணி - விநாயகபுரம் வீதி, உடுத்துறை - சுமைதாங்கி இணையடி வீதி, செம்பியன்பற்று - கன்னி அம்மன்கோயில் வீதி, திலீபன் மருத்துவமனை வீதி, வத்திராயன் குடியேற்றத்திட்ட வீதி, மாமுனை வீரபத்திரர் கோயில் வீதி சமாதான சூழல் ஏற்பட்டதன் பின்னர் பெரும்பாலான மக்கள் மீளக்குடியேறி விட்டனர். வீதிகள் புனரமைப்புப் பணிகளும் ஆங்காங்கே நடைபெற்று வருகின்றன.

மாமுனை தொடக்கம் கட்டைக்காடு வரையிலான 19 கி.மீற்றர் நீளமுள்ள வீதி பல மாதங்களாக நிகொட் நிறுவனத்தினதும் உலக உணவுத் திட்டத்தினதும் நிதி உதவியுடன் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

களியினால் செய்யப்பட வேண்டிய வேலைகள் முடிவுறும் தறுவாயில் உள்ளன. கல்லினால் போடப்பட வேண்டிய பகுதிகள் புனரமைக்கப்படாமல் உள்ளன.

கட்டைகாடு தொடக்கம் சுண்டிக்குளம் வரையிலான 16 கி.மீற்றர் நீளமுள்ள வீதியைப் புனரமைப்பதற்கு G.T.Z நிறுவனம் சுமார் 40 லட்சம் ரூபாவினை ஒதுக்கீடு செய்தது. இதன் புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதனைவிட வடமராட்சி கிழக்கு புனர்வாழ்வு புனரமைப்பு நிறுவனத்தினரால் மணற்காடு - பொற்பதி புதிய வீதி அமைக்கப்பட்டுள்ளது. இவற்றைத்தவிர பருத்தித்துறை பிரதேச சபையினரால் சில வீதிகளைத் திருத்துவதற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப் பிரதேசத்தின் வீதி புனரமைப்புப் பணிகளில் வடமராட்சி கிழக்கு புனர்வாழ்வு புனரமைப்பு நிறுவனத்தினர் அதிக அக்கறை காட்டி வருகின்றனர். எனவே இந்தப் பிரதேசம் அபிவிருத்தி அடைய வேண்டுமானால் இங்குள்ள பிரதான வீதிகள் மிக விரைவில் புனரமைக்கப்படவேண்டும்.

## சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான கருத்தரங்கு

சர்வதேச சிறுவர் பாதுகாப்பு நிதியம் நடாத்தும் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான கருத்தரங்கு நல்லூரில் நடைபெற்றுவருகிறது.

நல்லூர் ஈரோவில் நிறுவன மண்டபத்தில் கடந்த 4 ஆம் திகதி தொடக்கம் இடம்பெற்று வரும் இந்தக கருத்தரங்கில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய இடங்களிலுள்ள சிறுவர் பாதுகாப்பு சமூக சேவையாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் சர்வதேச சிறுவர் பாதுகாப்பு நிதியத்தைச் சேர்ந்த அதிகாரிகள் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான தமது கருத்துக்களையும், அதனைத் தடுப்பதற்கான வழிமுறைகளைப் பற்றி விளக்கங்களை அளித்து வருகின்றனர். இந்தக் கலந்துரையாடல் நாளையும் இடமபெறவுள்ளதாக, சர்வதேச சிறுவர் பாதுகாப்பு நிதியத்தினர் தெரிவித்தனர்.





**யாழ். பல்கலைக்கழகத்தில் 25 வருடங்கள் சேவையாற்றி ஓய்வுபெற்ற ஊழியர்களை கௌரவிக்கும் நிகழ்வில் - கௌரவிக்கப்பட்டோரையும், நிகழ்வில் கலந்துகொண்டோரையும் படங்களில் காணலாம்.**

*படம் - ஜெயராட்*

## நந்தாவில் குளத்தின் வாய்க்காலினுள் குப்பை கொட்டுவோர் மீது நடவடிக்கை

நந்தாவில்குளத்தையும், வாய்க்கால் பகுதிகளையும் அசுத்தம் செய்வோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என நல்லூர் பிரதேச சபையினர் தெரிவித்தனர்.

இந்த விடயம் தொடர்பாக பிரதேசசபையினர் அறிவித்தல் ஒன்றையும் வெளியிட்டுள்ளனர். வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுவரும் நந்தாவில் குளத்தைச் சுற்றியுள்ள கிராமங்களில் வசிக்கும் மக்களின் நன்மை கருதி நீண்ட காலத்துக்குப் பின்னர் நியாப் திட்டத்தின்கீழ் நந்தாவில் குளத்திலிருந்து மேலதிக நீரை வெளியேற்றும் வாய்க்கால் தற்போது புனரமைக்கப்பட்டு வருகினறது.

புனரமைப்பு வேலைகள் நடந்து கொண்டிருக்கும்போதே அந்தப் பகுதி மக்கள் பொறுப்புணர்வின்றி அந்த வாய்க்காலினுள் குப்பை கூழங்களைக் கொட்டி அசுத்தமாக்குகினறார்கள். பல லட்சம் ரூபா செலவில் உலகவங்கியின் உதவியுடன் செயற்படுத்தும் இந்தத் திட்டமானது பயனற்றுப் போயின், இந்தக் கிராமம் மீணடும் முற்றாக வெளளத்தில் மூழ்க வேண்டிய நிலை ஏற்படும எனச் எச்சரிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கிராம மக்களுக்குக் கழிவுகள் போட என அமைக்கப்பட்டுளள இடங்களில் அவற்றைப் போடுமாறும், மீறி நடப்பவர் மீது 1980 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கத் தேசிய சூழல் சட்டத்தின்படி சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அத்தோடு கடைகளால் போடப்படும் குப்பைகள் அவதானிக்கப்படுமிடத்து அந்தக கடைக்குரிய உரிமம் இரத்துச் செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நந்தாவில்குள வாய்க் காலைச் சுற்றியுள்ள மக்களின் நலன் பேணுவதற்காக இதனைப் பராமரிக்கக் குழுவொன்றையும் அமைத்து வேலைத் திட்டங்கள் நடைபெறுவதனால், சுற்றியுள்ள மக்கள் தமது ஆதரவை வழங்கி இந்த நடவடிக்கைக்கு துணைபோகுமாறு நல்லூர் பிரதேசசபையினர் தெரிவித்தனர்.

## தென்மராட்சி வலய மட்டத்தில் சிறுவர் தினத்தை முன்னிட்டு நடத்திய போட்டி முடிவுகள் வெளியாகின!

(நாவற்குழி)

சர்வதேச சிறுவர் தினத்தையொட்டி தென்மராட்சி வலயக் கல்வித திணைக்களம் பாடசாலை மாணவர்களிடையே நடாத்திய கட்டுரை, கவிதைப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

கட்டுரைப் போட்டியில் - கீழ்ப் பிரிவில் கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த வி.கௌசல்யா முதலாம் இடத்தையும, மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயத்தைச் சேர்ந்த த.அஜந்தன் இரண்டாம் - இடத்தையும், மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த வ.சோபிகா மூனறாம் - இடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

கட்டுரைப் போட்டி - கனிஷ்ட பிரிவில் சாவகச்சேரி இந்துக்கல்லூரியைச் சேர்ந்த ஜெ.ஜீவகன் முதலாம் இடத்தையும், இடைக் குறிச்சி சிறி சுப்பிரமணிய வித்தியாலயத்தைச் சேர்ந்த செ.துசிந்தா இரண்டாம் இடத்தையும், மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த கோ.சசிதா மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

கட்டுரைப் போட்டி - மேல் பிரிவில் மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த க.கிபேதிகா முதலாம் இடத்தையும், சாவகச்சேரி இந்துக்கல்லூரியைச் சேர்நத ந.சுபோதனா இரண்டாம் இடத்தையும், வரணி மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த வ.பிரதீபா மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

கவிதைப் போட்டி - கனிஷ்ட பிரிவில் சாவகச்சேரி இந்துக்கல்லூரியைச் சேர்ந்த எஸ்.சதுர்ஷியா முதலாம் இடத்தையும், மட்டுவில் கமலாசினி வித்தியாலயத்தைச் சேர்ந்த க.மயூரி இரண்டாம் இடத்தையும் விடத்தல்பளை கமலாசினி வித்தியாலயத்தைச் சேர்ந்த செ.வெனிஸ்ரா மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

கவிதைப் போட்டி - மேற்பிரிவில் நாவற்குழி மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த சி.றஜிதாஸ் முதலாம் இடத்தையும், மீசாலை விக்கி னேஸ்வரா மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த டா.சாலினி இரண்டாம் இடத்தையும், கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த செ.சர்மிலா மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

# காஸாவில் நடந்த மோதலில் ஆறு பலஸ்தீனர்கள் பலி!



காஸாவின் தென்பகுதியிலுள்ள ஜெவிஸ் குடியிருப்புப் பகுதியில் ஊடுருவிய 3 பலஸ்தீன ஆயுத பாணிகள் கொல்லப்பட்டனர். அத்துடன் இஸ்ரேல் படையினருக்கும் ஆயுத பாணிகளுக்குமிடையில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் சிக்கி தாய்லாந்துப் பணியாளர் ஒருவர் காயமடைந்தார்.

இதேவேளை, நேற்று அதிகாலை காஸாவின் பீட்லாகியா நகரப் பகுதியில் உள்ள வீடொன்றின் மீது இஸ்ரேலியத் தாங்கிகள் நடத்திய ஷெல் தாக்குதலில் 3 பலஸ்தீனர்கள் கொலலப்பட்டதுடன் 10 சிறுவர்கள் காயமடைந்தனர்.

குறித்த வீட்டின் மீது இஸ்ரேல் படையினரின் தாங்கிகள் மூலம் ஷெல் தாக்குதல் நடத்தியவேளை, அந்த வீட்டிலிருந்த பலஸ்தீனக் குடும்பத்தினர் நித்திரையில் இருந்ததாகவும், இதன்போது 15 வயதுச் சிறுவன் ஒருவன் உட்பட மூவர் கொல்லப்பட்டதாக பலஸ்தீன வைத்தியசாலை தகவல்கள் தெரிவித்தன.

அத்துடன் காயமடைந்த 10 சிறுவர்களும் 12 வயதுக்குட்பட்டவர்கள் எனவும் அந்தத் தகவல் தெரிவித்தது.

ஆனால், குறித்த வீட்டில் இருந்து கிளர்ச்சியாளர் ஒருவர் இஸ்ரேல் தாங்கிகளை நோக்கி மோட்டார் தாக்குதலை நடத்தியதாகவும் இதனையடுத்தே இஸ்ரேல் தாங்கிகள் அந்த வீட்டின் மீது தாக்குதலை நடத்தியதாகவும் இஸ்ரேல் இராணுவம் தெரிவித்தது.

# இந்திய மிராஜ் விமானம் விபத்து விமானி மயிரிழையில் உயிர்தப்பினார்

இந்திய விமானப்படைக்குச் சொந்தமான மிராஜ் 2000 ரக போர் விமானம் நேற்றுமுன்தினம் மொரீஷியசில் விபத்துக்குள்ளானது. ஆனால் இந்த விபத்தில் விமானி அதிர்ஷ்டவசமாக உயிர்தப்பினார்.

மொரீஷியஸ் நாட்டில் கடந்த திங்கள் விமானசாகசக்காட்சி நடந்தது. இதில் பங்கேற்பதற்காக இந்திய விமானப்படையைச் சேர்ந்த ஆறுபோர் விமானங்கள் தென்னாபிரிக்கா நாட்டிலிருந்து சென்றன. 25 ஆயிரத்திற்கு மேற்பட்ட பார்வையாளர்கள் இந்த விமானசாகசக் காட்சியை கண்டு ரசித்னர்.

உலக நோக்கு

ஆறு விமானங்களில் மிராஜ் 2000 ரக விமானம் ஒன்று நேற்று முன்தினம் மொரீஷியஸ் தீவின் தென்கிழக்குப் பகுதியிலுள்ள விளாய்சன்ஸ என்ற இடத்தில் பறந்துகொண்டிருந்தது. பின்னர் பிளாய்சன்ஸ் சர்வதேச விமானநிலையத்தில் தரையிறக்க முயற்சித்தது. அப்போது திடீரென கியர் செயற்படவில்லை. இதனால் 500 மீற்றர் தூரத்திற்கு விமானம் தரையில் சறுக்கியபடி சென்றது.

இந்த விபத்தில் விமானி அதிர்ஷ்டவசமாக உயிர்தப்பினார் விபத்திற்குள்ளான இந்த விமானத்தை தவிர மற்ற ஐந்து விமானங்களும் நேற்று முன்தினம் இந்தியா திரும்பின. விபத்துக்குள்ளான விமானம் மட்டும் பரிசோதனை மற்றும் ஆய்வுக்காக மொரீஷியஸ் நாட்டில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

# சாதனை புரிந்த விமானம்



பூமியின் தரைமட்டத்தில் இருந்து 103 கிலோ மீற்றர் உயர வானவெளிக்கு இரண்டுமுறை பறந்து செல்லும் விமானத்துக்கு ரூ.50 போடி பரிசு வழங்குவதாக அமெரிக்காவில் உள்ள அன்சாரி எக்ஸ் பிரைஸ் என்ற நிறுவனம் அறிவித்துள்ளது.

இந்த சாதனைக்காக ஸ்பேஸ் ஷிப் ஒன் என்ற சிறப்பு விமானம் தயார் செய்யப்பட்டது. கடந்த புதன்கிழமை . 103 கிலோ மீற்றர் உயரத்திற்கு பறந்தது. நேற்றுமுன்தினம் 2ஆவது முறையாக இந்த விமானம் மீண்டும் வானத்தை நோக்கி 3 லட்சத்து 68 ஆயிரம் அடி உயரத்துக்கு பறந்து சாதனைபடைத்தது. இந்த விமானத்துக்கு பரிசாக இலங்கை மதிப்பின்படி 110 கோடி நேற்று வழங்கப்பட்டது.

## ஈராக்மற்றும் பிறவிடயங்கள் குறித்து

# அமெரிக்க உப ஜனாதிபதி வேட்பாளர் தொலைக்காட்சியில் நேரடி விவாதம்

அமெரிக்க உபஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ள தற்போதைய குடியரசுக் கட்சியின் உபஜனாதிபதி டிக்சேனி மற்றும் ஜனநாயகக் கட்சி வேட்பாளரான ஜோன் எட்வேட் இருவரும் நேற்று தொலைக்காட்சியில் நேரடி விவாதம் ஒன்றை நடத்தினர்.

இருவரது விவாதத்திலும் ஈராக் மீதான படையெடுப்பு மற்றும் ஆப்கான் போர், பொருளாதார விடயங்கள் முக்கியத்துவம் பெற்றன.

இந்த விவாதத்தில் உரையாற்றிய டிக்சேனி - ஜோஜ் புஷ் தலைமையிலான நிர்வாகம் ஈராக் மீது படையெடுத்தது சரியெனத் தெரிவித்தார்.

ஆனால், ஜோஜ் புஷ்ஷின் நிர்வாகம் - அமெரிக்க மக்களுக்கு எவ்வித சரியானதகவலையும் தெரிவிக்காமலேயே ஈராக் மீது படையிடுப்பு நடத்தப்பட்டதாக டேவிற் குற்றஞ்சாட்டினர்.

அத்துடன், ஈராக்கின் முன்னாள் ஜனாதிபதி சதாம் மிகவும் திட்டமிட்ட முறையில் தனது உறவை பின்லேடனுடன் வளர்த்தெடுத்ததாகவும் டிக்சேனி தெரிவித்ததை ஜோன் எட்வேட் மறுதலித்தார்.

ஈராக்கில் பயங்கரவாதத்தை ஒழிப்பதாகக் கூறி படையெடுப்பு நடத்திய போதிலும், அந்த முயற்சி தற்போது திசைமாறி சென்று விட்டது. அத்துடன், ஈராக்கில் சமாதானத்தை ஏற்படுத்தும் திட்டமெதுவும் புஷ்ஷின் நிர்வாகத்திடம் இல்லையெனவும் எட்வேட் தெரிவித்தார்

அத்துடன், ஈராக்கில் தற்போது பல மில்லியன் டொலரிலான புனர்நிர்மாணப்பணிகள் ஹலிபேற்றன் என்ற நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. இந்தக் கம்பனிக்கும் தற்போதைய உப ஜனாதிபதியான டிக்சேனிக்கும் தொடர்பிருப்பதாகவும் எட்வேட் குற்றஞ்சாட்டினார்.

ஆனால் இதனை டிக்சேனி மறுத்ததுடன் அமெரிக்காவின் வெளிநாட்டுக் கொள்கை தொடர்பாக ஜனநாயகக் கட்சி கௌரவமான முறையில் நடந்துகொள்ளவில்லையெனத் தெரிவித்தார்.

அத்துடன் ஜோன் ஹெரி தனது 30 வருட அரசியல் வாழ்வில் அமெரிக்காவின் பாதுகாப்புத் தொடர்பாக பிழையான கருத்தையே கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இருவரும் தற்போதைய ஆப்கானின் நிலைமைகள் தொடர்பாகவும் விவாதித்தனர். இதில் 2001 இல் ஆப்கானின் ஆட்சியிலிருந்த தலிபான்களை அகற்றுவதற்கு படையெடுப்பு மேற்கொண்ட பின்னர் அங்கு தலிபான் ஆட்சி அகற்றப்பட்டது.



தற்போது அங்கு பாரிய முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக டிக்சேனி தெரிவித்தார். ஆனால், ஆப்கானில் தற்போது பாதுகாப்பான நிலையொன்று உருவாக்கப்பட்டுள்ளதாகவும் அங்கு பல குழுக்கள் இன்னமும் ஆயுதங்களுடன் நடமாடிவருவதாகவும் எட்வேட் தெரிவித்தார்.

90 நிமிடங்களாக இடம்பெற்ற இந்த விவாதத்தில் பொருளாதாரம், சுகாதாரம் மற்றும் பிற விடயங்கள் தொடர்பாகவும் இருவரும் விவாதித்தனர். இதில் ஜனநாயக் கட்சி அரசாங்கம் அமைத்தபோது, சகலருக்கும் வரிகளை உயர்த்துவதாக டிக்கேனி தெர்வித்தார்.

ஆனால், குடியரசுக் கட்சியினர் செல்வந்தர்களின் வரிகளையே நீக்கியுள்ளதாக எட்வேட் தெரிவித்தார்.

இதனிடையே புஷ்ஷிற்கும் ஜோன் ஹெறிக்கும் இடையிலான இரண்டாவது விவாதம் நாளை இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஆப்கான் உப ஜனாதிபதி வேட்பாளரின் கூட்டத்தில் குண்டுவெடித்து ஒருவர் பலி!



ஆப்கானின் பைசபாத் மாகாணத்தில் உப ஜனாதிபதிக்கு ஆதரவாக இடம்பெற்ற பிரசாரக் கூட்டமொன்றில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் ஒருவர் கொல்லப்பட்டதுடன் நால்வர் காயமடைந்தனர்

இந்தத் தாக்குதலின் போது பிரசாரத்தில் ஈடுபட்டிருந்த உப ஜனாதிபதி வேட்பாளரான அகமட் சியா மசூத் காயம் ஏதுமின்றித் தப்பினார்.

இந்த தாக்குதலை நடத்தியது யாரென எவரும் இதுவரை உரிமை கோரவில்லை. ஆனாலும், ஆப்கானில் நடைபெறவுள்ள தேர்தலைக் குழப்பப் போவதாக தலிபான் சூளுரைத்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

தாக்குதல் நடத்தப்பட்ட மாகாணம் கிளர்ச்சி வாதிகளின் நடவடிக்கைகள் பெருமளவில் உள்ள பகுதியென தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதல் தொடர்பாக முன்னுக்குப் பின் முரணான தகவல்கள் வெளிவந்தவண்ணமுள்ளன.

ஒரு தகவலின்படி, உபஜனாதிபதி வேட்பாளரான மசூத் விமான நிலையத்திலிருந்து வாகனத் தொடரணியாக சென்றுகொண்டிருந்தவேளை, வீதியோரமாக கிடந்த குண்டு வெடித்ததாக தெரிவிக்கப்படுகிறது.

ஆனால், கூட்டத்திற்கான ஊர்வலத்திலேயே குண்டு வெடித்ததாக ஆப்கான் உள்துறை அமைச்சுப் பேசாளரான லுத்புல்லா மாஷல் தெரிவித்தார்.

இந்த தாக்குதல் சம்பவம் தொடர்பான விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும், இதுவரை எவரும் கைதுசெய்யப்படவில்லையெனவும் தெரிவித்த மாஷல் இந்த தாக்குதலை நடத்தியவர்கள் தேர்தல் மூலம் நிலைநாட்டப்படவுள்ள சமாதானத்தை எதிர்க்கும் எதிரிகள் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை கடந்த திங்கட்கிழமை ஆப்கானின் தென்பகுதி மாகாணமான கான் பகுதியில் தலிபான்களின் மறைவிடம் ஒன்றின் மீது நடத்தப்பட்ட மூன்று மணிநேரத் தாக்குதலில் ஏழு தலிபான் சந்தேக நபர்கள் கொல்லப்பட்டும் ஐவர் கைது செய்யப்பட்டதாகவும் ஆப்கார் படையினர் தெரிவித்தார்.

இதன்டையே ஆப்பானின் தென் பகுதி மாகாணமான கந்தகாரில் பொலிஸாரின் வாகனமொன்று கண்ணிவெடியில் சிக்கி சிதறியதில் ஏழு பொலிஸார் கொல்லப்பட்டனர் .

இந்த தாக்குதல் றிமோட் கொன்றோல் மூலமே நடத்தப்பட்டதாக அம்மாகாண பொலிஸ் அதிகாரி கான் மொகமட் தெரிவித்தார்.

# மூன்று அமெரிக்கர்களுக்கு பௌதீகவியல் நோபல் பரிசு!



ஸ்டாக்கோம் பௌதீகவியல் துறைக்கான நோபல் பரிசு இந்த ஆண்டு மூன்று அமெரிக்கர்களுக்கு பகிர்ந்து அளிக்கப்பட்டுள்ளது.

பௌதீகவியல் துறைக்கான இந்த ஆண்டு நோபல் பரிசை டேவிட்ஜெ கிராஸ் எச்.டேவிட்பொலிட்சர், பிராண்க்வில்செக் என்ற மூன்று அமெரிக்கர்கள் வென்றுள்ளனர். பௌதீகவியல்துறையில் திடசக்தி குறித்த ஆராய்ச்சிக்கான நோபல் பரிசு இந்த மூவருக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. இதற்கான அறிவிப்பை நோபல் பரிசு வழங்கும் நிறுவனம் அறிவித்துள்ளது.

அணுக்கரு அறிவியலில் புரோட்டான் நியூட்டன் ஆகியவற்றுக்கு இடையில் மிகமுக்கிய ஆதிக்கம் செலுத்தும் திடசக்தி குறித்து இவர்கள் மேற்கொண்ட ஆய்வுகளின் கண்டுபிடிப்புகள் கடந்த 1973ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. இவர்களது இந்த ஆய்வுகள் பௌதீகவியல் படிப்பில் இருக்கும் குவாண்ட்டம் குரோமோடைனமிக்ஸ் என்ற விஞ்ஞானத்திற்கு பெரும்பயன் அளிக்கும் வகையில் உள்ளது என்று அந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 10 ஆயிரம் வகை நறுமணங்களை எப்படி உணர்கிறோம்

### கண்டுபிடிப்புக்கு நோபல் பரிசு

கண்ணை மூடிக்கொண்டு 'பில்டர்' காபியா, ரோஜாப்பூவா என்று உங்களால் சொல்ல முடிகிறது என்றால் அதற்கு காரணம் நமது வாசனை அறியும் திறன்தான். நம்மால் 10 ஆயிரம் வகையான நறுமணங்களை பிரித்து வாசனை அறிந்து கொள்ள முடியும். இந்த திறன் எப்படி நமக்குள் செயல்படுகிறது என்பது இதுநாள் வரை புரியாத புதிராக இருந்தது. இதற்கு அமெரிக்காவை சேர்ந்த ரிச்சர்ட் ஆக்ஸல் மற்றும் லிண்டா பக் விடைகண்டறிந்தனர். நம் உடலில் உள்ள ஆயிரம் ஜீன்கள் நாம் வாசனையை நுகரும் நூற்றுக்கணக்கான ஏற்பிகளை வடிவமைத்திருக்கிறது. சிக்கலான இந்த ஆய்வு முடிவுகளை அங்கீகரிக்கும் வகையில் இந்த ஆண்டின் உடலியல் / மருத்துவத்துக்கான நோபல் பரிசு அவர்களுக்கு நேற்று பகிர்ந்து அளிக்கப்பட்டது.



நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# சுமுகமான சூழலில் நடைபெற்ற படையினர் - புலிகள் சந்திப்பு!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளுக்கும் இராணுவ அதிகாரிகளுக்குமிடையிலான நல்லெண்ணச் சந்திப்பு ஏற்கனவே தீர்மானித்தபடி நேற்றுக்காலை 10.30 மணியளவில் வவுணதீவு யுத்தசூனியப் பிரதேசத்தில் நடைபெற்றது.

கடந்த மாதம் 22 ஆம் திகதி இடம்பெற்ற இருதரப்புச் சந்திப்பில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைய இடம்பெற்ற இந்தச் சந்திப்பில், இராணுவத்தின் 23 ஆவது படைப்பிரிவு கட்டளை அதிகாரி பிரிகேடியர் வஜிர விஜயகுணவர்த்தன கலந்து கொள்ளவில்லை.

இந்தச் சந்திப்பின்போது இருதரப்பினரதும் வழமையான பாதுகாப்பு நிலை காணப்படவில்லை.

விடுதலைப் புலிகள் தரப்பில் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட நிர்வாகத்துறைப் பொறுப்பாளர் தயாமோகன், அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் குயிலின்பன், தலைமைச் செயலக இணைப்பாளர் மார்ஷல் ஆகியோர் கலந்து கொண்டனர்.

படைத்தரப்பில் - 23-3 ஆவது படைப்பிரிவு கட்டளை அதிகாரி கேணல் லக்சிறீ அமரதுங்க, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மஹேல சமரதிவாகர, விசேட அதிரடிப்படை உதவி பொலிஸ் அத்தியட்சகர் டபிள்யூ.கே.சிறீசேன மற்றும் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஏ.எம்.கீரகல்ல ஆகியோர் கலந்துகொண்டனர்.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் மாவட்ட பிரதித் தலைமைக் கண்காணிப்பாளர் ரோர் ஹோல்ம் முன்னிலையில் சுமார் 2 மணிநேரம் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் கடந்த மாதம் நடந்த சந்திப்பில் ஏற்பட்ட முன்னேற்றங்கள் குறித்து ஆராயப்பட்டது.

இருதரப்பினரும் அந்தச் சந்திப்பின் பின்னர் முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளதாக குறிப்பிட்டு திருப்தி தெரிவித்தனர்.

நேற்றைய சந்திப்பில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி இனிமேல் மாதம் இரு தடவைக்குப் பதிலாக மாதாந்தம் கடைசி வாரம் இத்தகைய சந்திப்புக்களை மேற்கொள்வது எனத் தீர்மானிக்கப்பட்டது.

எதிர்வரும் சந்திப்புக்களில் விடுதலைப் புலிகளின் இராணுவப் பிரிவைச் சேர்ந்தவர்களும் கலந்து கொள்ளவேண்டுமென படைத்தரப்பால் இந்தச் சந்திப்பிலும் கோரிக்கை முன்வைக்கப்பட்டதாகத் தெரியவருகின்றது.

சந்திப்பின் பின்னர் செய்தியாளர்களிடம் கருத்துக்கள் எதையும் தெரிவிக்க இராணுவ அதிகாரிகள் மறுத்துவிட்டனர்.

சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மஹேல சமரதிவாகர - இந்தச் சந்திப்பு சுமுகமாக இடம்பெற்றதாகவும் இத்தகைய சந்திப்புக்கள் மூலம இருதரப்பு நல்லுறவை வலுப்படுத்தி, சுமுகநிலையைக் கட்டியெழுப்பமுடியும் எனவும் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் மட்டு - அம்பாறை மாவட்ட நிர்வாகத் துறைப் பொறுப்பாளர் தயாமோகன் கருத்துத் தெரிவிக்கையில் -

சோதனைச்சாவடிகளில் விடுதலைப் புலிப் போராளிகளுக்கு ஏற்படும் தாமதங்கள் மற்றும் இடையூறுகள் காரணமாக அவர்கள் பற்றிய தகவல்கள் மாற்றுக்குழுவினருக்கு சென்றடையக்கூடிய வாய்ப்புக்கள் பற்றி சுட்டிக்காட்டி, இத்தகைய இடையூறுகளும், தாமதங்களும் தவிர்க்கப்படவேண்டியதன் அவசியம் பற்றி இந்தச் சந்திப்பில் வலியுறுத்தியுள்ளோம்.

பெண் போராளிகளை ஆண் படையினர் சோதனையிடுவது தவிர்க்கப்பட்டு பெண் படையினர் சோதனையிட வேண்டும் என்ற கோரிக்கையும் முன்வைக்கப்பட்டதாக தெரிவித்தார்.

# 'அலைபாடும் பரணி' ஒலிநாடா இன்று முல்லையில் வெளியீடு

தமிழீழ விடுதலைப் புலிகளின் கடற்புலிகள் அமைப்பினரால் 'அலைபாடும் பரணி' எனும் ஒலிநாடா இன்று வெளியிடப்படவுள்ளது.

கடற்புலிகளின் துணைத்தளபதி லெப்டினன்ட் கேணல் நிரோஜன் மற்றும் அவருடன் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட மாவீரர்களின் ஐந்தாம் ஆண்டு நினைவுதின நிகழ்வையொட்டியே இந்த ஒலிநாடா வெளியிட்டு வைக்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வு இன்று மாலை 7 மணிக்கு முல்லைத்தீவு மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெறவுள்ளது. கடற்புலிகளின் ஆதரவில் இசைப்பிரியனின் இசையில் தர்மேந்திரா கலையகத்தினரால் இந்த ஒலிநாடா உருவாக்கப்பட்டுள்ளது.

# சிறப்பாக நடைபெற்ற ஆசிரியர் தின நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டிலுள்ள பாடசாலைகளில் ஆசிரியர் தின நிகழ்வுகள் நேற்று சிறப்பாகக் கொண்டாடப்பட்டன.

ஒவ்வொரு பாடசாலைகளின் முகப்புக்களும், ஆசிரியர் தின நிகழ்வு நடைபெற்ற மண்டபங்களும் மாலைகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தன.

ஆசிரியர்கள் அணிவகுப்பு மரியாதைகளுடன் ஊர்வலமாக அழைத்துவரப்பட்டு மலர்மாலைகள், இனிப்பு மாலைகள், காசு மாலைகள் என்பன அணிவித்து அவர்களின் சேவையை பாராட்டும் நிகழ்வுகள் நடைபெற்றன.

ஆசிரியர்களின் சேவைகளைப் பாராட்டும் சிறப்பான மேடை நிகழ்வுகளும் நடைபெற்றன.

சில பாடசாலைகளில் ஆசிரியர்களைக் கௌரவிக்கும் வகையில் பரிசுப் பொதிகள், மதிய உணவு விருந்துகளும் அளிக்கப்பட்டன.

(தீ,51)

## அரிசி...

தொடர்பாக, மேற்கொள்ளப்பட்ட நேற்றைய விசேட கூட்டத்திலேயே இந்தத் தீமானம் எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி வெளிநாடுகளிலிருந்து பெறப்படும் அரிசி மீதான இறக்குமதித் தீர்வை டிசெம்பர் 31 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

இதனால் அரிசி ஒரு கிலோ 35 ரூபாவாக விற்கப்படும் எனவும், சீனி கிலோவுக்கு 5 ரூபாவாலும், பருப்பு கிலோவுக்கு 7 ரூபாவாலும் விலை குறைக்கப்படும் எனவும் விசேட அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

## சிங்கள ஆசிரியர்கள் திருமலையில் போராட்டம்!

(கொழும்பு)

சிங்கள ஆசிரியர்கள், வடக்கு-கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் முன்பாக நேற்று மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சம்பள முரண்பாடுகள், ஆசிரிய இடமாற்றம், பதவி உயர்வு வழங்கப்பட்ட ஆசிரியர் நியமனத்தில் ஏற்பட்டுள்ள முரண்பாடுகள் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து இந்தப்போராட்டத்தை நடத்தினர்.

வடக்கு - கிழக்கு பகுதியிலுள்ள பாடசாலைகளில் கடமையாற்றும் நூற்றுக்கணக்கான ஆசிரியர்கள் இந்த மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தமது கோரிக்கைகளுக்கு உடன் தீர்வுகாண்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு இந்த மறியல் போராட்டத்தில் ஈடுபட்டோர் வலியுறுத்தினர்.

தமது கோரிக்கைக்கு விரைவில் சாதகமான பதில் வழங்கப்படாவிட்டால் தொடர்ச்சியான மறியல் போராட்டத்தில் தாம் ஈடுபடப்போவதாகவும் இவர்கள் எச்சரிக்கை விடுத்தனர்.

மேலும் நேற்றுக்காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெற்ற இந்த மறியல் போராட்டத்தின் பின்னர் தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றையும் மாகாண கல்வி அமைச்சின் அதிகாரிகளிடம் கையளித்தனர்.

இதேவேளை, இந்தப் போராட்டத்தில் தமிழ், முஸ்லிம் ஆசிரியர்கள் எவரும் கலந்துகொள்ளவில்லையென்பது குறிப்பிடத்தக்கது.

(10,04)

## முக்கிய...

எதிர்வரும் 11 ஆம் திகதி இந்தியாவுக்கான பயணத்தை மேற்கொள்ளவிருக்கும் அமைச்சர் விதார் ஹெல்கிசன் 14 ஆம் திகதிவரை புதுடெல்கியில் தங்கியிருப்பார் என-முன்னாள் இலங்கைத் தூதுவரும், தற்போதைய இந்தியாவுக்கான நோர்வேத் தூதுவருமான ஜோன் வெஸ்பேர்க் தெரிவித்தார்.

இந்தியாவில் தங்கியிருக்கும் காலத்தில் விதார் ஹெல்கிசன் இலங்கையின் சமாதான முயற்சிகளில் காணப்படும் முட்டுக்கட்டைகளை நீக்குவது குறித்து இந்தியத் தலைவர்களுடன் ஆலோசனைகளில் ஈடுபடுவார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை விவகாரத்தில் நோர்வேயும், இந்தியாவும் உயர்தர கருத்துப் பரிமாற்றங்களைச் செய்து வருகின்றது. இலங்கைப் பிரச்சினை விவகாரத்தில் நடுநிலையாளராகப் பணியாற்றும் நோர்வே இது தொடர்பான ஒவ்வொரு நடவடிக்கைகள் குறித்தும் இந்தியாவுக்குத் தெரியப்படுத்திவருகிறது.

கடந்த திங்கட்கிழமை ஜெனீவாவில் ஹெல்கிசன் தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேச்சு நடத்தியதன் பின்னரே இந்தியாவுக்கான விஜயத்தை மேற்கொள்வதற்குத் திட்டமிட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## வெலிக்கந்த...

இந்த சம்பவத்தையடுத்து அப்பிரதேசத்தில் தற்போது பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது. பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. வெலிக்கந்த பொலிஸார் தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை கடந்த திங்கட்கிழமை இரவு பொலனறுவ முஸ்லிம் கொலனியில் தமிழர் ஒருவர் சுடப்பட்டு காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கே.ரஞ்சன் (வயது 38) என்ற இந்தநபர் தொழில் புரியும் தனியார் அரிசி ஆலைக்குள் பிரவேசித்த இனந்தெரியாத ஆயுதபாணிகள் இந்த துப்பாக்கிப் பிரயோகத்தை செய்துவிட்டு தப்பிச்சென்றுள்ளதாக கூறப்படுகிறது.

இதேவேளை, இந்தக் கொலைகள் கண்டிக்கப்படவேண்டியவை என்றும் இந்தச் சம்பவத்திற்கும் தமக்கும் எவ்வித தொடர்புமில்லையெனவும் தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களின் நிர்வாகப் பொறுப்பாளர் தயாமோகன் தெரிவித்துள்ளார் என பி.பி.சி. தமிழ்ச்சேவை தெரிவித்தது.

## பாதுகாப்பு...

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத் தெரிவித்தார்.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான இராணுவப் பயிற்சி, புலனாய்வுத் தகவல் பரிமாற்றம், கரையோரப் பாதுகாப்பு நடவடிக்கைகளை விரிவுபடுத்தல் என்பன போன்ற விடயங்கள் இந்தப் பாதுகாப்பு ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்தக் குழு இலங்கை வந்ததும் இவர்களுடன் பேச்சு நடத்திய பின்னர் பாதுகாப்பு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடப்படவுள்ளதாக சிறில் ஹேரத் மேலும் தெரிவித்தார்.

## ஒரே பிரசவத்தில்...

பெற்றுவந்திருந்தனர்.

இந்நிலையில் நேற்று அவர்களுக்கு ஐந்து குழந்தைகள் பிறந்தன. இதுவரை இலங்கையில் மூன்று குழந்தைகள் ஒரே சூலில் பிரசவிக்கப்பட்டமையே சாதனையாக விளங்கியபோதும் நேற்று ஐந்து குழந்தைகள் பிறந்தமையே புதிய சாதனையாகப் பதியப்பட்டுள்ளது.

பிரசவிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு குழந்தையும் 1.1 கிலோக்கிராம் முதல் 2.2 கிலோக்கிராம் வரையான நிறையைக் கொண்டவையாகவுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

## மகளிர்...

பாளர் கோதை திறந்துவைத்தார். தமிழீழ காவல்துறையினரின் செயற்பாட்டு மையத்தை தமிழீழ காவல்துறை துணைப் பொறுப்பாளர் மாதவன் திறந்துவைத்தார்.

அதற்கான பெயர்ப்பலகையை மன்னார் மாவட்ட காவல்துறை குற்றத்தடுப்புப் பிரிவைச் சேர்ந்த கண்ணாளன் திரைநீக்கம் செய்துவைத்தார்.

அங்கு நிறுவப்பட்டிருந்த மருத்துவ முகாமை வைத்திய கலாநிதி திருமதி எழுமதி கரிகாலன் திறந்துவைத்தார். கடற்புலிகளின் மாதிரி காட்சி மண்டபத்தை கடற்புலிகளின் மகளிர் படையணியின் சிறப்புத் தளபதி விடுதலை திறந்துவைத்தார்.

விடியல் படைவீடு என்னும் மாதிரி படைமுகாமை தமிழீழ மகளிர் படையணியைச் சேர்ந்த அஸ்வினி திறந்துவைத்தார்.

விசேடமாக அமைக்கப்பட்டிருந்த கடற்புலிகளின் திருவுருவப்படம் மற்றும் மாவீரர் திருவுருவப்படங்கள் வைக்கப்பட்டுள்ள மண்டபத்தை குட்டிசிறி மோட்டார் படையணியின் சிறப்புத் தளபதிகளில் ஒருவரான கோபால் திறந்துவைத்தார்.

இங்கு அனைவரையும் மிகவும் கவரக்கூடிய விதத்தில் வடிவமைக்கப்பட்டிருந்த குறிபார்த்துச்சுடுதல் நிகழ்வு நிலையத்தை விடுதலைப் புலிகளின் படைத்துறை பயிற்சிக் கல்லூரியின் மகளிர் பொறுப்பாளர் கவிதா நிகழ்வை ஆரம்பித்துவைத்துத் திறந்துவைத்தார்.

இந்த நிகழ்வுகள் மற்றும் கண்காட்சிகள் எதிர்வரும் 10 ஆம் திகதிவரை - காலை 9 மணிமுதல் இரவு 10 மணிவரை இடம்பெறுமென்பது குறிப்பிடத்தக்கது.

SPOKEN ENGLISH WITH GRAMMAR
LECTURES BY
Mr.M.A.HARI
புதிய பிரிவு ஆரம்பம்
09.10.2004
சனிக்கிழமை மாலை
9.00 p.m
SAT SUN 9.00 a.m - 10.00 a.m
HARY'S INSTITUTE
இல 564, கஸ்தூரியார் வீதி
(யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலைக்கு அருகில்,
யாழ்ப்பாணம்
(சி-3226)

## முகமாலை போக்குவரத்து...

சர்வதேச செஞ்சிலுவைக்குழு பாதை திறப்பு நேரத்தை நீடிக்கத் தயாராக இருக்கின்றபோதிலும், இந்தப் பாதை திறப்பு நேர விவகாரத்தில் விரைவான பதில் தரப்படும்.

அவர் அங்கு தொடர்ந்து கூறுகையில் -

சமாதானம் நிலைபெறுவதையே இராணுவத்தினரும் விரும்புகின்றனர். நாம் யாழ். மாவட்டத்தில் சமாதானத்தைக் கட்டிவளர்ப்பதற்காகவே இருக்கின்றோம். சமாதானம் நிலை பெறவேண்டும் என்ற மக்களின் நிலைப்பாட்டை எமது தலைமை அலுவலகத்துக்குத் தெரியப்படுத்தியுள்ளோம்.

பிரச்சினைகள் தீர்க்கப்படவேண்டியவை. மக்களும் இராணுவத்தினரும் புரிந்துணர்வுடன் செயற்படவேண்டும். குறிப்பாக பொறுமையை கடைப்பிடிக்க வேண்டும். சில விடயங்கள் தாமதமாக நடைபெறும். பேச்சுக்கள் மூலமே பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முடியும்.

எம்மால் தீர்க்கமுடியாத சில பிரச்சினைகள் தொடர்பாக எமது தலைமை அலுவலகத்துக்கு அறிவித்துள்ளோம். தற்போது பலாலி உயர்பாதுகாப்பு வலயத்தை அண்டிய 600 மீற்றர் பகுதிகளில் 2 ஆயிரத்திற்கு மேற்பட்ட குடும்பங்கள் மீளக் குடியேற்றப்பட்டுள்ளன.

இவ்வாறு மீளக் குடியேறும் மக்களுககு திருப்தியளிக்காவிட்டாலும் இந்த விடயத்தில் ஓரளவு முன்னேற்றத் தன்மை காணப்படுகிறது.

தென்மராட்சி பிரதேசத்திலுள்ள வயல் நிலங்கள் பயிற்செய்கைக்காக மக்களிடம் கையளித்திருக்கிறோம். அங்கும் சில பிரச்சினைகள் இருக்கின்றன என நான் அறிகிறேன். அங்கு நேரில் சென்று அவற்றைப் பார்வையிட்டு, தீர்வுக்கான வழிவகைகளை மேற்கொள்ளவுள்ளேன்.

இந்திய மீனவர்கள் எமது கடலில் அத்துமீறி மீன்பிடிக்கும் பிரச்சினை தொடர்பாக நான் நன்கு அறிவேன். இது இரண்டு அரசுகள் பேசவேண்டிய விடயம்.

இராணுவத்தின் பண்ணைக் காவலரண் வீதிப் போக்குவரத்துக்குத் தடையாக இருக்கின்றது எனத் தெரிவிக்கப்படுகின்றது. அதனை நீக்குவதற்கு நாம் நடவடிக்கை எடுப்போம். குறிப்பாக யாழ். குடாநாட்டில் சுமுகநிலை ஒன்றைத் தோற்றுவிப்பதே எமது நோக்கம் எனத் தெரிவித்தார்.

## தேசிய லொத்தர் சபை மஹஜன சம்பத பெறுபேறுகள்

சீட்டிழுப்பு இல:- 1654 திகதி:- 05.10.2004

வெற்றி இலக்கங்கள்

W 8 5 1 7 4 6

அடுத்த சுப்பர் பரிசு 339 லட்சத்துக்குமேல்

### சர்வதேச நாணயங்களுக்கான இலங்கை வங்கியின் நாணயமாற்று விகிதங்கள் வருமாறு

| நாணயங்கள் | கொள்விலை ரூ.ச | விற்பனைவிலை ரூ.ச |
|---|---|---|
| அமெரிக்க டொலர் | 130.12 | 103.99 |
| யூரோ | 126.54 | 128.57 |
| ஸ்டேலிங் பவுண் | 183.55 | 186 |
| சுவிஸ் பிராங் | 81.18 | 82.98 |
| அவுஸ்ரேலிய டொலர் | 74.14 | 74.81 |